நாட்டுப்பாடல் வெளியீடு—௪

கட்டபொம்மு கூத்து

பதிப்பாசிரியர்:
நா. வானமாமலை, எம்.ஏ.,எல்.டி.

மதுரைப் பல்கலைக்கழகம்
மதுரை-2

முதல் பதிப்பு—மார்ச், 1972

நாட்டுப்பாடல் வெளியீடு—4

கட்டபொம்மு கூத்து

விலை: ரூ. 2—25

அச்சிட்டோர் :
நியூ செஞ்சுரி பிரிண்டர்ஸ்,
6/30, மவுண்ட்ரோடு, சென்னை-2.

கட்ட பொம்மு கூத்து
(கதைப் பாடல்)

முன்னுரை

கட்டபொம்மு பற்றி கோவில்பட்டி தாலுக்காவில் வழங்கும் கதைப்பாடல்களும், கூத்துப்பாடல்களும், கும்மிகளும் ஏராளம். இவற்றில் கதைப்பாடல் ஒன்றை 1961ல் நான் பதிப்பித்துள்ளேன். நியூ செஞ்சுரி வெளியீட்டாளர் அதனை வெளியிட்டனர். அதற்கு நீண்டதோர் முன்னுரை எழுதினேன். அதில் கதைப்பாடல்கள் பற்றியும், வரலாற்று கதைப்பாடல்கள் பற்றியும், கட்டபொம்மு கதை வழங்கிவரும் உருவங்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளேன்.

இந்த நூல் இப்பொழுது கிடைக்காததால் மதுரைப் பல்கலைக் கழகம் வெளியிடும் ''கட்டபொம்மு கதைப்பாடல்'' என்ற நூலில் அம் முன்னுரையை முழுவதும் வெளியிட்டு, வேறு சில செய்திகளையும் சேர்த்திருக்கிறேன்.

இந்த நூலைப் படிப்பவர்கள் இவ்விரு நூல்களையும், அவற்றின் முன்னுரைகளையும் படிக்கவேண்டுமென வேண்டிக்கொள்கிறேன்.

ஆயினும் சரித்திரக் கதைப்பாடல்களைப் பற்றிய சில முக்கிய பொருள்களை அறிந்து கொள்ளுவதற்காக அம் முன்னுரையின் ஓர் பகுதியைக் கீழே தருகிறேன்.

கதைப்பாடல்களில் காணப்படும் சரித்திரக் கதைகளில் முக்கியமானவை, தேசிங்கு ராஜன் கதை, கட்டபொம்மன் கதை, மருதுபாண்டியர்கதை, கான்சாகிப் சண்டை, பூலுத்தேவர் சிந்து, ராமப்பய்யன்கதை முதலியவை. இவ்வரலாற்று வீரர்களின் சரித்திரங்கள் பலவகையான உருவங்களில் நாட்டுக் கதைப் பாடல்களாக வழங்கி வருகின்றன. இக் கதைகளில் சரித்திரத்தை நாம் உழைக்கும் மக்களின் கண்ணோட்டத்தில் காண்கிறோம். சரித்திர வீரர்களின் சிறந்த பண்புகளை இக் கதைகள் போற்றிப் புகழ்கின்றன. கட்டபொம்மு, மருது சகோதரர்கள் முதலிய வெள்ளையர்களை எதிர்த்த வீரர்களின் சரித்திரங்களை வழிவழியாக வந்த கதைப்பாடல்கள் மூலம் அறிகிறோம். உண்மை வரலாற்றைத் திரித்துத் தங்களுக்குச் சாதகமாக எழுதி வைத்துள்ள

ஆங்கிலேயர்களது முயற்சிகளே. இக்கதைகள் உண்மையை வெளிப் படுத்தி முறியடித்து விட்டன. வெள்ளையர்கள் மறைத்து விட்ட பல நிகழ்ச்சிகளை இக் கதைப் பாடல்கள் நமக்கு வெளிப்படுத்து கின்றன.

இக் கதைப்பாடல்களைக் கொண்டு மட்டும் சரித்திர நிகழ்ச்சி களை நாம் உறுதியாக அறிந்து கொள்ள முடியாது. இவற்றை ஒதுக்கித் தள்ளிவிட்டும் சரித்திர உண்மைகளை அறிந்து கொள்ள முடியாது. கிடைக்கும் கல்வெட்டு முதலிய சரித்திரச் சான்று களையும், நாட்டுக் கதைப்பாடல்கள் முதலிய இலக்கியச் சான்று களையும் ஒப்பிட்டு நோக்கி, பலவாற்றானும் செய்திகளைச் சலித்துப் பார்த்து முடிவுக்கு வரவேண்டும்.

இக் கதைப்பாடல் பற்றி

இக் கதைப்பாடல் கோவில்பட்டித் தாலுகாவிலும் இராமநாதபுரம் மாவட்டம் தென்பகுதியிலும் இன்னும் பாடப் பட்டு, நடிக்கப்படும் கூத்துகளில் வழக்கில் உள்ளது. இதற்கு மூலங்கள் பல பல நாட்டுப்பாடல்கள். அந்த நாட்டுப்பாடல் களிலுள்ள கதை நிகழ்ச்சிகளையும் கும்மிப்பாடல்களையும் இக் கதைப்பாடல் மேற்கொண்டுள்ளது. ஆயினும் தனி நாட்டுப் பாடல்களைப் போல கூட்டுப் படைப்பாக இல்லாமல், தனி ஆசிரியர் ஒருவரால் படைக்கப்பட்டது. இதன் ஆசிரியர் அடைக்கலபுரம் சிதம்பரசுவாமிகள். அவர் பெயருக்கு ஆசிரியரே அன்றி அவருக்கு முன்பிருந்த நாட்டுப் பாடல்களையும், கதை களையும் கதைப்பாடல்களையும் சேகரித்து, கூத்து நாடகத்திற் கிசைய ஒரு கதைப்பாடலாக எழுதியுள்ளார். ஒருவர் இயற்றியது நாட்டுப்பாடல் ஆகுமா? (Folk Literature) என்ற கேள்வியை நாட்டுப் பண்பாட்டியல் ஆராய்ச்சியாளர்கள் கேட்பதில்லை ஏனெனில் நீண்டகதைப் பாடல்கள் தனிப்பட்டவர்களால் எழுதப் படுகிறது. இது நாட்டுப்பாடல் மரபுகளைப் பின்பற்றி எழுதப் பட்டு, ஏதாவதோர் பிரதேசத்தில் மக்களிடையே பரவி, அவர்க ளாலும் வாய்மொழியாகப் பரப்பப்பட்டால் (oral transmission) அதுவும் நாட்டுப்பாடலாகும் என்பதை உலகநாட்டுப் பண்பாட் டியல் ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக்கொண்டுள்ளார்கள். இக் காரணத்தைப் பற்றியே தமிழ்க்கதைப் பாடல்கள் பலவற்றையும் (Folk ballads) நாட்டுக் கதைப்பாடல்கள் என்றழைக்கிறோம்.

இப்பாடல் ஓர் அசல் நாட்டுப்பாடல் என்று கூறலாம். நம் நாட்டு உழைக்கும் மக்களின் எண்ணங்களையும், சிந்தனைகளையும் மெருகில்லாமல் நாட்டுப்பாடல் சித்தரிக்கிறது. அதனால்தான்

இதனை அசல் நாட்டுப்பாடல் என்று சொல்லுகிறோம். மக்களது உணர்ச்சிகளையும், சிந்தனைகளையும் இலக்கிய மெருகோடு சித்தரிக்கும் பாடல்களும் உள்ளன. பள்ளுப்பாடல்களில் பள்ளர்களின் வாழ்க்கையும், குறவஞ்சியில் குறவர்களின் வாழ்க்கையும் அனுதாபத்தோடு சித்தரிக்கப்படுகிறது. அவை உழைப்போர் வாழ்க்கையைப் படித்தவர்களுக்கு எடுத்துச்சொல்லும் விளக்கமாகவே இருக்கின்றன. அவை கிராம மக்களின் நாவிலே பயிலுவதில்லை. கிராமமக்கள் அப்பாடல்களின் பொருள்களையும், உணர்ச்சிகளையும் புரிந்துகொள்ளமுடியாது. ஏனெனில் அவை மக்கள் மொழியில் இல்லை. கடினமான சொற்களும், சொற்சேர்க்கைகளும் அவற்றுள் உள்ளன. படிக்காதவனுக்குப் புரியாத யாப்பிலக்கண மரபுகள் காணப்படுகின்றன. ஆனால் இப்பாடலோ படிக்காத உழைக்கும் மக்களுக்குப்பாடினாலும், நடித்துக் காட்டினாலும், விளங்கும்படி மக்களால் பேசப்படும் சொற்களைக் கொண்டே எழுதப்பட்டுள்ளது.

தனி மனிதன் எழுதிய காரணத்தால், இடையிடையே பாத்திரப் பேச்சாகவும், கவிக்கூற்றாகவும், விருத்தங்கள் பயின்று வந்துள்ளன.

பெரும்பான்மையாக பாத்திரங்களின் பேச்சு வாயிலாகவே கதை நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன.

இடையிடையே நிகழ்ச்சிகளைக்கூற உரைநடை பயன்படுத்தப் பட்டுள்ளது. இக் கதையைச் சுருக்கமாகக் கூறவும் பயன்படுத்தப் படுகிறது.

வெள்ளையன் இறந்தவுடன் கட்டபொம்மு பதிலாள் தேடப் புறப்படுகிறான். ஊமைத்துரையும் கூடச் செல்லுகிறான். இது முதற்கொண்டு இரண்டாவது சண்டை வரைக்குமுள்ள கதையை வசனம் சுருக்கிக் கூறுகிறது. இதற்கோர் உதாரணம்:

"இரண்டுபேரும் புறப்பட்டுச் செல்ல இச்சமாசாரம் சென்னைக்குப்பறந்தது. மகாராணியவர்களுக்குத் தெரிவிக்க, அப்படிப்பட்ட சுத்த வீரனைக் கொல்லாமல் சின்ன நவாபு பட்டம் கொடுக்கச் சொல்லி அக்கடிதம் கோவில்பட்டிக்கு வர, மற்றப் பாளையப்பட்டாரறிந்து வேறே கடிதம் எழுதித் தெரிவிக்க அக்கினிச் சென்னல் பட்டாளத்துடன் புறப்படல். இரண்டாவது சண்டை. அக்கினிச் சென்னல் கோலம்"

பெரும்பாலும் உரையாடலாகவே கும்மிப்பாட்டின் மூலம் கதை நடத்திச் செல்லப்படுகிறது.

இக்கூத்து தெலுங்குபேசும் மக்கள் முன்னால் நடைபெறுவதால் இடையிடையே தெலுங்கில் கதாபாத்திரங்கள் பாடுகின்றனர். இடையிடையே தெலுங்குப்பாடல்கள் வருவதை தெலுங்குபேசும் மக்கள் பெரிதும் ரசிப்பார்கள்.

கதை நிகழ்ச்சிகளில் சில மரபுப் பாடல்கள் சிலவற்றிலிருந்து (traditional folk ballads) மாறுபடக் கூறப்பட்டுள்ளன. அவற்றை அடிக்குறிப்புகளில் சுட்டிக்காட்டியுள்ளேன்.

இக்கதைப்பாடலை எழுதுவதற்கு கூத்து நடத்துவோர் எழுதி வைத்திருக்கும் கதைப்பாடல்களும், பழைய அச்சுப்பிரதி யொன்றும், ஓர் ஏட்டுச் சுவடியும் துணை செய்தன.

இப்பாடல் சுதந்திர இயக்கம் தோன்றிய பின் எழுதப்பட்ட தாலும், தமிழ்நாட்டில் வ. உ. சி. யின் போராட்டங்கள் நடை பெற்றபின், அந்த எழுச்சியின் தாக்கம் கிராமமக்களிடையே பரவிய பின் இப்பாடல் எழுதப்பட்டதாலும், கட்டபொம்மு சக்க தேவியை மட்டுமல்லாமல் பாரத நாட்டைப் பற்றியும் பேசுகிறுன்

சில விடங்களில் வெள்ளையரைப் புகழ்ந்து பேசுகிற இடங் களைக் காணலாம். இதற்குக் காரணம் வெள்ளையர் காலத்தில் கட்டபொம்மு நாடகத்தை நடிக்கவும்பாட்டைப்பாடவும் தடை யிருந்ததுதான், போலீசார் காதில் படும்படி, கட்டபொம்மனைச் சில விடங்களில் திட்டுவதும், வெள்ளைக்காரர் ஆட்சியைச் சில விடங் களில்புகழ்வதும் போலீசாரை ஏமாற்றி நாடகத்தை நடத்தவும். பாட்டைப்பாடவும் முடிவதற்காகவே. பொதுவாக அவனை வீர னென்று கருதியவர்கள்தான் அவனைப் பற்றிப்பாடி அவனது நினைவை நிலைக்கச் செய்துள்ளனர்.

வெள்ளையர் கட்டபொம்முவின் நினைவை அகற்றச் செய்த முயற்சிகள் பல. அவனது கோட்டையை அழித்தார்கள். கோட்டையிருந்த நிலத்தில் வீடுகட்ட அனுமதிக்கவில்லை. அவ் விடத்தைப் பாழ்நிலம் என்று ஆவணங்களில் குறிப்பிட்டார்கள். கட்டபொம்மன் கதையைப் பாட அனுமதி மறுத்தார்கள். அதே சமயம் கட்டபொம்மனுக்கு எதிராகப் போராடிய வெள்ளை ராணுவ அதிகாரிகள் எழுதிய நூல்கள் வெளியிடப்பட்டன. அவை ‘சரித்திரம்’ என்ற அந்தஸ்தைப் பெற்றன. ஆனல் இத்திரிபான வரலாறுகள் மக்களிடையே பரவவில்லை.

வெள்ளையர் போராட்டத்தில் உயிர் நீத்த கட்டபொம் முவையும், ஊமைத்துரையையும் மக்கள் நினைவில் வைத்திருந் தனர். இரவில் கும்மியடித்து அவர்கள் வீரத்தைப் பாடினர்.

இவ்வாறு பாடியவர்கள், கட்டபொம்மு சாதியைச் சேர்ந்த கம்பளத்தார் மட்டுமல்ல. எல்லோரும் பாடினார்கள். இவ்வாறு மக்கள் நினைவுகளும் உணர்ச்சிகளும் பாடல் உருவம் பெற்றன பாடலிலும், ஆடலிலும் வல்லவர்கள் அவற்றை எழுதி வைத்தார்கள். அவையே கதைப் பாடல்களாக உருவாகி, ஒயில் கும்மியாகவும், கூத்தாகவும், கூட்டுப் பாடலாகவும் கட்டபொம்மன் காலத்திலிருந்து இடையறாத வெள்ளமாக ஓடத்தொடங்கியது. இடையிடையே பல சிறுகதைகள் இக்கதை வெள்ளத்தில் சேர்ந்து சங்கமித்தன.

இதுவரை கட்டபொம்மனைப் பற்றி வெளியிடப்பட்டவை மூன்று நாட்டுக்கதைப் பாடல்களே. சிரஞ்சீவி என்னும் எழுத்தாளர் பகுதிபகுதியாக ஓர் கட்டபொம்மன் கும்மிப்பாடலை உரை நடையான கதைப் போக்கோடு சேர்த்து வெளியிட்டுள்ளார் இது முழுமையான கதைப்பாடல் ஆகாது. இதன் பின் நான் முன் குறிப்பிட்டபடி N. C. B. H. பதிப்பகத்தார் 1961ல் வெளியிட்ட எனது பதிப்புத்தான் முதன் முதலில் வெளியான கட்டப்பொம்மனைப் பற்றிய நாட்டுக்கதைப்பாடல். அது கட்டபொம்மனது காலத்தில் வாழ்ந்த நாட்டுப்பாடல் புலவர் ஒருவ்ரால் எழுதப்பட்டது. அதற்கடுத்து நான் பதிப்பித்திருக்கும் கட்டபொம்மன் கதைப்பாடலை மதுரைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது. நான்காவது இக்கூத்துப்பாடல். கட்டபொம்மன் வரலாறு பற்றிச் சில நூல்கள் புராணப்பாணியில் எழுதப்பட்டுள்ளன அவற்றில் இலக்கிய மதிப்போ, வரலாற்று மதிப்போ இல்லை.

கட்டபொம்முவின் வரலாற்றுண்மையான செய்திகள் பற்றிக் 1961ல் வெளியான N. C. B. H. பதிப்பிலும், மதுரைப்பல்கலை கழகப்பதிப்பிலும் நான் ஆராய்ந்துள்ளேன், எனவே இம் முகவுரையில் அதனை மீண்டும் ஆராய அவசியமில்லை.

இந்நூலை வெளியிட முன்வந்த மதுரைப் பல்கலைக் கழகத்திற்கும், அதற்காக யோசனை கூறிய துணைவேந்தர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனாருக்கும் எனது நன்றி. ஒரு வரலாற்றுக் கதைப் பாடலை மறைந்து போகாமல் பாதுகாத்த பெரும் பணியை அவர்கள் செய்துள்ளனர். அவர்களுக்கு நாட்டுப் பண்பாட்டு ஆராய்ச்சித் துறையினரும் தமிழ் மக்களும் பெரிதும் கடமைப்பட்டுள்ளனர்.

மிகப் பழைய, பிழைகள் மலிந்த அச்சுப்பிரதிகள், நோட்டுப் புத்தகங்கள், ஏட்டுப் பிரதி இவற்றினின்றும் இந்த நூலை முழுவது

பிரதி செய்தவர் எனது அருமை நண்பர் ஓணமாக்குளம் பெருமாள். இத்தகைய நூலைப் பிரதி செய்வதற்கு அவர் காட்டிய பொறுமையும், எடுத்துக் கொண்ட முயற்சியும் பெரிதும் பாராட்டத்தக்கது. அவரே தெலுங்கு பேசுபவராதலால் தெலுங்குப் பாடல்களை இசை தவறாது மொழி பெயர்த்துள்ளார். அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடிக் குறிப்புகளுக்கு நானே முழுவதும் பொறுப்பேற்றுக் கொள்ளுகிறேன். எனது நண்பர் ஓணமாக்குளம் பெருமாள் கோவில் பட்டி பகுதியில் தெலுங்கு பேசும் மக்களிடையே வழங்கும் கொச்சைத் தெலுங்குச் சொற்களின் பொருளையும், தமிழ்ப் பழமொழிகளின் பொருளையும் எனக்கு அறிவித்ததற்கு அவருக்கு எனது நன்றி.

பாளையங்கோட்டை
16-10-70

நா. வானமாமலை
பதிப்பாசிரியர்

பாஞ்சாலங் குறிச்சி

கட்டபொம்மு துரை கதை

விநாயகர் காப்பு வெண்பா

பூஞ்சோலை பொங்கும் புவி மீதருளாலே
பாஞ்சாலி நந்நகர் பங்கபோங்கத் தேன் சொரியுங்
கட்டபொம்மு கீதங்கழ றவே யானை முகன்
தொட்ட கரப் பாதந் துணை.

நடை

(நாட்டுப் பாடல்)

தன்னன தானன தன்னன்று
தன்னன தானன தன்னனறு.
சீர்மலியு மெங்களாண்டவனே சித்திக்கணபதி முன்னடவாய்.
நீர்மலியும் புதுமீதிவிலங்கிய நீதவிநோத வசீகரரனே,
உத்தமனே நவரத்தினமே ஓங்காரத்து ட்பொருளே,
முந்தி முந்தி விநாயகனே, முருக பிரானுக்கு மூத்தவனே,
ஆலரமத்தடிப் பிள்ளையாரே, அரசமரத்தடி விநாயகனே,
வேலமரத்தடிப் பிள்ளையாரே, விக்கினம் வாராமற் காத்தருள்வாய்,
தந்தி முகனே தயாபரனே சங்கடமில்லாமற் காக்க வேண்டும்
மோதகந் தோசை பணியாரம் முருக்கு சர்க்கரை எள்ளுருண்டை
அப்பமவல் பொரிலட்டுடனே ஆனவகை யெல்லாம் நான் படைப்பேன்
தேங்காயுடைத்து வைத்திடுவேன் தெச்சணையாலுனைக் கும்பிடுவேன்.
பாடவறியேன் படிப்பறியேன் பக்கத்துணை செய்ய வேண்டுமையா.
ஏடறியேனெழுத்தறியேன் எந்தனைக் காப்பாற்ற வேண்டுமையா.

கட்டபொம்முகதை யான்படிக்க கண்ணாலே பார்த்திட
வேண்டுமையா.
ஊமைத்துரைகதை யான்படிக்க உண்மை யுரைத்திட
வேண்டுமையா.
பாஞ்சாலக்கதை யான்படிக்கப் பக்கத்துணை செய்ய
வேண்டுமையா.
சக்கதேவிகதை யான்படிக்கத் தயவுசெய்திட
வேண்டுமையா

மேறபடி சந்தம் — சரஸ்வதி துதி

வெண்டாமரையிலுறைபவளே, வேதாந்த ஞானத்தினுட்
பொருளே,
நான்முகன் நாவிலிருப்பவளே, நம்பின பேர்க்
கருளம்பிகையே
நாடெங்கும் செல்லுதுன் சாத்திரங்கள், நானெங்கு
சொல்லுவேனுன் மகிமை?
ஊரெங்கும் சொல்லுதுன் சாத்திரங்கள்,
உண்மையைச் சொல்லுவேன் கேட்டவர்க்கு.
உன் துணையல்லாது வேறுதுணை உண்டோ, யோசனை
செய்யயிலே,
என்துணை நீயென்று சொல்வதனாலெங்களை ரட்சிக்க
வேண்டுமம்மா.
சக்கம்மாள்[1] வாக்குப் பலிக்க வேண்டும் தண்டமிழ்
வாசகம் பொங்க வேணும்.
பாஞ்சாலி[2] வாக்குப் பலிக்கவேணும் பங்கமில்லாச்
செல்வம் பொங்க வேணும்.
ஊமைத்துரை கட்டபொம்மு செய்த ஒப்பில்லாச் செய்கை
தெரிய வேணும்.
மாதமும் மாரி பொழியவேணும் வந்தெம்மைக் காப்பாற்ற
வேண்டுமம்மா.

மேற்படி சந்தம்—முருகன் துதி

நீலமயிலுறை வேலவனே, நீர்மலி செந்திச் கடவுளரே
அம்பிகை மீனாக்ஷி பாலகனே ஆறுமுகா வள்ளி நாயகனே
பாலாபிசேகம் பழநியிலே பண்டார வேடம் புனத்தருகே
தேனாபிசேகம் பழநியிலே சிங்காரவேடம் கழுகுமலை.

---

1. சக்கம்மாள். 2 பாஞ்சாலி - கிராமதேவதைகள் தெலுங்கு பேசும் சாதியினருள் சிலர் வணங்கும் தெய்வங்கள்.

கற்பூர வாசங்கமகமென கல்யாணமேடை பளபளென
சாம்பிராணி வாசம் கமகமென தண்டைசிலம்பு
கலகலென
தொண்டரரோகராவென்றுரைக்கத் துத்துமி[3]மேளந்
திடதிடென
சங்கம் பம்போவெனச் சேகண்டி டண்டெனத் தண்டாயுதன்
துணை என்றுரைக்க
பாவனையாகிப் பூஜையிலே பல்லாண்டு கூறிப் பணிந்தே
னம்மா
வந்தென்னை ரட்சிக்க வேண்டுமம்மா, மன்னவன் கட்டன்
கதைபடிக்க.

மேற்படி சந்தம் — சக்கம்மாள் துதி

என்னை ஆண்டவளே சக்கதேவி எங்களை முக்காலும்
காகுமம்மா
ஆண்டவளே குலதேவதையே, ஆதரிக்கவேண்டுஞ்
சக்கம்மாளே
மேல மலையாளம் போனவளே[4] விஞ்சை மந்திரங்
கற்றவளே,
தெற்கு மலையாளம் போனவளே தேவி மந்திரம்
கற்றவளே
பெண்டு மலையாளம் போனவளே பேற்பெற்ற மந்திரங்
கற்றவளே.
கொத்துப்பல்லாரியை[5] யாண்டவளே கூடையிற் கூடவே
வந்தவளே
கூடையிற் கூடவே வந்தவளே கொப்பாடு சூல்
கொண்ட சக்கதேவி
மாராட்டப்பாசியுங்[6] கொண்டவளே மந்திர தந்திரங்
கற்றவளே
கைவளையோலை கருகுமணி[7] கண்டஞ்சொலித்திடும்
சக்கம்மாளே

3. துத்துமி — துந்துபி மேளம்.

4. மலையாளம் மந்திரவாதத்திற்குப் புகழ் பெற்றது. எனவே மந்திரவாதம் கற்க மலையாளம் போக வேண்டும் என்றது.

5. கொத்துபல்லாரி — இவளை வணங்கும் கம்பளத்தார் பல்லாரியிலிருந்து வந்தவர்கள் என்று குறப்பாடல் கூறுகிறது. அவர்கள் பல்லாரியிலிருந்து வந்த போது; இவளும் கூடவே கூடையில் வந்தவள் என்பது கம்பளத்தார் நம்பிக்கை.

6, 7 மாராட்டப்பாசி, கருகுமணி—கம்பளத்தார் அணியும் அணிகலன்கள். இவற்றைக் கோர்த்து அணிவார்கள்.

பொங்கு மிலந்தைமுட் கோட்டையிலே போற்றிட வாழ்
கின்ற சக்கதேவி,
பாஞ்சைப்பதியிலே கட்டபொம்மு பச்ச[8]மிலங்கிய
சக்கதேவி,
வாய்பேசாப் பாண்டிய னூமைத்துரை வல்லபம் பேசிட
வந்தருள்வாய்
வல்லபம் பேசிட வந்தருள்வாய், வஞ்சனை வல்பிணி
தீர்ப்பவளே
என்ன பிழைகளிருந்தாலும் எங்களை முக்காலும்
காவுமம்மா[9]

மேற்படி துதி—விருத்தம்

மாதவமுங் கல்வியாலே மகிமையான
வல்லபமுஞ் செல்வ மிக வளருமிந்த
பூதலத்திற் கட்டபொம்மு கதையைப் பாடப்
புத்தியிலே வந்தருள்வாய் சக்கதேவி
பாததுணை யென்றுன்னைப் போற்றுமென்னை
பால்முகத்தைப் பாராமலிருந்திடாதே
சீதவயல் சூழ் பெருமைப் பாஞ்சைநாடு
சிந்தாத தெள்ளமுதே! சிந்தித்தேனே.

கதை ஆரம்பம்

தன்னன தானன தன்னனன்னு
தன்னன தானன தன்னனன்னு

தம்பிகளை பொம்முதுரை சக்கம்மாள் பாத விசேஷ
மதால்
கொத்துப் பல்லாரியை யாண்டதிலே குற்றமிதுவரை
கண்டதில்லை.
யார்செய்த மோசமோ பூமியிலே அந்தரமாரி பொழிய
வில்லை.
எவர்செய்த மோசமோ பூமியிலே எள்ளளவு மழை
பெய்யவில்லை.
பன்னீர்வருட[10] மழையுமில்லை பஞ்சமுண்டானது
தேசமெல்லாம்

8. பச்சம்—பட்சம், நேசம்
9. காவுமம்மா—காப்பாற்றும் அம்மா.
10. பன்னீர்—பன்னிரு.

காலமழைகள் பெய்யாததனுல் கவலையுற்றது கம்பளங்கள்
கோடை மழைகள் பெய்யாததனுல் குறைவடைந்தது
கம்பளங்கள்
தேசமழைகள் பெய்யாததனுல் சிந்தை மெலிந்தது
கம்பளங்கள்[11]

காளைபொம்முதுரை சொல்வது
மேற்படி சந்தம்

அண்ணுவே அண்ணுவே கேளுமையா அன்பான தம்பி நான்
சொல்லுகிறேன்
நம்மாலே காரியமொன்றுமில்லை நாதன் செயலன்றி
வேறுமில்லை
ஈசனுலாவதை யல்லாமல் எம்மாலே உம்மாலே
யாவதுண்டோ?
என்னென்ன கவலை வந்தாலும் ஏற்படுமோ சக்கதேவி
முன்னே?
சக்கதேவிதுணை என்றிருந்தால் உண்டானதுன்பமும்
தீர்ந்துவிடும்.
உத்தமிதான் துணையென்ருந்தால் உண்டான துன்பமும்
தீர்ந்துவிடும்.
பத்தினி தான் துணை யென்றிருந்தால் பஞ்சமுண்டானு
லுந்தீர்ந்துவிடும்.

செல்ல பொம்முதுரை சொல்வது
மேற்படி சந்தம்

தெச்சண பூமியை நோக்குதையா தெய்வீக வாக்குள்ள
கம்பளங்கள்
அன்னமில்லாமலே வாடுதையா அஞ்சாத நெஞ்சுள்ள
கம்பளங்கள்.
ஆடையில்லாமலே வாடுதையா அட்டகாசஞ் செய்யும்
கம்பளங்கள்.
மாரிபொழிந்திடுஞ் சீமையிலே வாழ்ந்திட லாமென்று
போகிறதாம்.
செந்நெல் விளைந்திடுஞ் சீமையிலே சேர்ந்திடு வோமென்று
போகிறதாம்.

11. பல்லாரியில் வாழ்ந்த கம்பளத்தார் தம் நாட்டில் மழை பெய்யாத தைக் கண்டு வருந்தி என்ன செய்வதென்று யோசிக்கிருர்கள்.

ஏற்பட்ட பஞ்சக் கொடுமையினுலெத் தேசம் போகுதோ
கம்பளங்கள்.
இன்பமடைந்திடும் நாளையிலே ஏற்பட்டதே பெரும்
சங்கடங்கள்.
துன்பமுண்டாகியே வாடலாமா தோக்கலவார்குலக்
கம்பளங்கள்[12]

கம்பளத்தார் மழையில்லாமல் வருத்தமுற்று
செல்லபொம்மு துரையிட முரைத்தல்-கம்பளத்தார் சொல்வது
மேற்படி சந்தம் - தெலுங்கு

ஒரே ஒரே[13]ரண்டா ஒக உத்த மாட்டலு செப்ப பொய்யேன்
ஊான மிந்த குடண்டரா மஞ்சு வொகட்டியுங் கானமுரா
இல்லவுண்டித்த மேமந்தனு எல்லபது கேதி செப்பண்டதிரா
மொக்கே தெய்வுமுறேகான மோசமு சேசிதா பொய்
யேசனே.
வித்தின பத்தி செட்டந்த விட்டிலு தினேசி பொய்
யேசனே
ஏமிசேசேதி செப்பண்டரா எந்து பொய்யேதி செப்
பண்டரா
வானகுரிசின தேச முகுமேமு பொய்யி பதுக வாலா
தச்சண சீமைகு போக வாலா தல்லி பிட்டலு பாரி ரண்டா[14]

கம்பளத்தார் இப்படிப் புலம்பிக் கொண்டு செல்லபொம்மு
துரையிடம் சென்றவுடன் உபசரித்தல்—செல்லபொம்மு
துரை சொல்வது
மேற்படி சந்தம்

வாருங்கோ வாருங்கோகம்பளங்காள் வந்த விவரத்தைச்
சொல்லுமையா
வாடு முக முடன் வந்த தென்ன மண்டிலே கூடியே
நொந்த தென்ன
ஒன்பதுகம் பளச்சாதியிலே உண்டான குற்றங்களென்ன
சொல்வீர்
சாதிமுறையிலே தப்பினதோ சங்கடம் நேர்ந்ததைச்
சொல்லிடுவீர்

12. செல்லபொம்மு என்ற கம்பளத்தார் தலைவன் கூறுவது. நஞ்செய்ப் புலங்கள் நிறைந்த தென் நாடுகளை நோக்கிக் கம்பளத்தார் செல்வதாகக் கூறுகிறார்.

கம்பளம் சொல்வது

அய்யாவே எங்களை ஆண்டவனே அவ்விதச் சங்கட
மொன்றுமில்லை,
தேச மழையின்றி வாடுகிறோம் திக்கு வேறில்லாமல்
ஓடுகிறோம்
காலமழையின்றி வாடுகிறோம் காப்பவறில்லாமல்
ஓடுகிறோம்
காக்குந்திடமுள்ள சக்கதேவி காருண்ய மில்லாமல்
போயினளே
தெச்சணபூமி செழித்ததினுற் சென்று வருகிறோம் ராஜாவே,
செல்லவிடை தர வேண்டுமையா தெச்சண தேசத்திற்
கிச்சணமே.

செல்லபொம்முதுரை, தம்பிகாளை பொம்மிடஞ் சொல்லுவது

மேற் படிசந்தம்

தம்பிகாளை பொம்முதுரை சக்கம்மாள் செய்கையைப்
பார்த்தனையா?
கம்பளம் துன்புறக்காணலாமா, கஷ்டமெலாஞ் சொலக்
கேட்டனையா?

அதற்குப்பதில் காளை பொம்முதுரை சொல்வது

மேற் படிசந்தம்

அண்ணாவே அண்ணாவே என்செய்வோம் ஆதரவற்றது
கம்பளங்கள்.
கம்பளஞ் சொன்னதற்குத்தரவு தென்புடனேதர
வேண்டுமையா.

13. 14. தமிழ் நாட்டில் வழங்கும் தெலுங்கு

14. இப்பாடலுக்குத் தமிழ் மொழி பெயர்ப்பு.

ஏலே ஏலே வாங்க ஒரு நல்ல வார்த்தை சொல்லப் போறேன். வானமெல்லாம் பாருங்கடா ஒரு மேகத்தை எங்குமே காணவில்லை. இப்படி இருந்தால் நாமெல்லோரும் எப்படிப் பிழைப்பது சொல்லுங்கடா கும்பிடும் தெய்வமும் கூட இப்போ மோசம் செய்து போய் விட்டதே விதைத்த பருத்திச் செடியை யெல்லாம் விட்டில் தின்று போய் விட்டதே என்ன செய்யலாம் சொல்லுங்கடா எங்கே போகலாம் சொல்லுங்கடா மழை பெய்த தேசத்திற்கு நாம் போய் பிழைக்கலாம். தெற்கு தேசத்திற்குப் போக வேண்டும் தாய் பிள்ளைகள் ஓடி வாங்க.

செல்லபொம்முதுரை கம்பளத்தாருக்கு விடையளிப்பது

அய்யாவே அய்யாவே கேளுமையா அன்பான வார்த்தை
நான் சொல்லுகிறேன்
தெச்சண பூமி செழித்ததினுற் சென்றிடுவீர் மிக
நன்றெனவே

கம்பளத்தார் உத்தரவைக் கேட்டவுடன் புறப்படுவது சக்கம்மாள் துதி

சென்றுவருகிறோம் மன்னவனே, சேவிக்கிறோம் தன்மை
பாவிக்கிறோம்.
உன்னைப்பிரிந்திட ஞாயமுண்டோ, வுத்தமனே எங்கள்
ராஜாவே.
நீரில்லாத கிணறுபோலுமையா நின்னைப் பிரிந்திடுங்
காரணத்தால்.
நின்னைப்பிரிந்திடுங் காரணத்தால் நிழலில்லாமரம்
போலலைந்தோம்.
வாசமிழந்தமலர்போலே வாடுகிறோம் உன்னைத் தேடுகிறோம்
சோடிபிரிந்த கிளிபோலே தூங்குகிறோம், நகர் நீங்கு
கிறோம்.
தாமரையில்லாத பொய்கையிலே[15] தொழுகிறோம் மண்ணில்
வீழுகிறோம்

தெச்சணம் நோக்கிக் கம்பளம் செல்வது மேற்படிசந்தம் – தெலுங்கு

ரண்டரா ரண்டரா போத்தமுரா ராஜா வாக்கட
செப்பாய
ராஜாவாக்கட செப்பாய நஸ்ஸவுண்டாதி நம்பதுகு
எல்லவுண்டினுலு முண்டிபொய்யி இன்னடே தச்சணம்
போகவாலா
தச்சண சீமைகு போத்தேதா ஒச்சினதுன்பமு திரபொய்யி[16]

15. பல்லாரியில் தாமரையில்லை—ஆனால் கவிதையில் கற்பனை விரிகிறது.

16. இப்பாடலுக்குத் தமிழ் மொழி பெயர்ப்பு:
வாங்கடா வாங்கடா போகலாண்டா ராஜவிடம் சொல்லியாச்சி ராஜா விடம் சொல்லியாச்சி நம்பிழைப்பு நல்லாருக்கு எப்படி இருந்தாலும் இருந்திட்டுப் போகுது இப்பவே தெற்கே போக வேண்டும் தெற்குச் சீமைக்குப் போனுல்தான் வந்த துன்பம் தீருமய்யா.

சென்ற கம்பளங்கள் இடை இடையே தங்க வேண்டிய இடங்களில் தங்கி, செக்காரக்குடி சென்று இதில் வாசம் செய்வோமென ஆலோசனை—பெரிய நாயக்கர் சொல்வது

மேற்படி சந்தம்

ஓரே ஓரே முத்தாலு ஒக உத்தமாட்டலு செப்ப
பொய்யேன்
ஈடதாராமன அந்தருனு இன்பமு பெட்டி பதுகவலா
சக்கம்மா இல்லுகட்டவலா சந்தோஷ முகபதுகவலா
மனகுமில்லு கட்டவாலா மங்கள கேஷ்மு பெட்டவாலா[17]

கம்பளங்கள் புறப்பட்டு செக்காரக்குடி சென்று குடி ஏறினபின் செல்ல பொம்முதுரை வருத்தமடைவது

மேற்படி சந்தம்

தம்பிகாளை பொம்முதுரை சங்கடம் நேர்ந்ததைப்
பார்த்தனையா
நம்மை வணங்கிய கம்பளங்கள் நண்ணுந் திசையெதோ
நானறியேன்
எவ்விடஞ் சென்றதோ கம்பளங்கள் என்னென்ன
பட்டதோ சங்கட
யாரிடஞ் சென்றதோ கம்பளங்கள் அங்கென்ன பட்டதோ
சங்கடங்கள்.
முன்னே சென்றது கம்பளங்கள் பின்னே செல்லுவோந்
தம்பியரே
இட்டபயிர்களை விட்டில் தின்றுலிங்கே நமக்குச்
சோலியென்ன[18]

காளைபொம்முதுரை சொல்வது

மேற்படி சந்தம்

அண்ணுவே அண்ணுவே நீர்கேளும் அன்புள்ள தம்பி நான்
சொல்லுகிறேன்
அன்னையினுத்தர வாகுமையா அண்ணருரைத் திடுங்
கரியாங்கள்

17. இப்பாடலுக்குத் தமிழ் மொழி பெயர்ப்பு.
ஏலே ஏலே முத்தாலு ஒரு நல்ல வார்த்தை சொல்லப் போறேன். இந்த இடத்திலே நாமெல்லோரும் இன்பமாக வாழ்ந்திட சக்கம்மாளுக்கு வீடு கட்ட வேண்டும் சந்தோஷமாக வாழ வேண்டும் நமக்கு வீடுகட்ட வேண்டும் நன்றாக சேமமாய் வாழ வேண்டும்.

தந்தையினுத்தர வாகுமையா நமையனுரைத்திடுங்
காரியங்கள்
எப்படி யாகிலும் தச்சணத்திற் செய்யத்
துணிந்திடிலுய்ந்திடுவோம்.

செல்ல பொம்முதுரை தன் குடும்ப சகிதம் புறப்பட்டு,
என்னையாண்டவளே என்று பாடிக் கொண்டு நடத்தல்
குண்டூருக்கு ராஜாசபை-தேச விசாரணை

மேற்படி சந்தம்

முன்வருங்காரிய முரைப்பவரே முந்திரி பிசகில்லா[19]
மந்திரியே
பின் வருங்காரிய முரைப்பவரே, பேரறிவான சிகாமணியே
மாதமும் மாரி பொழிகிறதா? மானிடப் பூண்டு தழைகிறதா?
நாட்டில் மும்மாரி பொழிகிறதா? நஞ்சைபுஞ்சை விளை
கிறதா?
கேட்டதற்குப் பதில் சொல்ல வேண்டும் கிட்டதர்பார்க்கு
உண்மை மந்திரியே

மந்திரி சொல்வது

ஏராள மழை பெய்ததாலே இட்டபயிர் விளைந்திட்ட
தய்யா
நம்மதி காரத்திலுள்ள தெல்லாம் நன்மையல்லாதென்ன
தின்மை[20] வரும்

தர்பார் நடக்கும்போது செல்ல பொம்முதுரையும் தம்பியும்
என்னையாண்டவளே என்று பாடிக் கொண்டு
ராஜாவைக் கண்டுரைப்பது

குண்டூரையாள்கின்ற கோமானே கொற்றவனே நல
முற்றவனே
தெச்சண மேகும் வழிதனிலே சீர்த்திலையக் கேட்டிங்கு
வந்தோமையா.

18. நமது குடிகள் தென் தேசம் சென்ற பின் தாமும் போக வேண்டும் எனத் தலைவனும், அவனது தம்பியும் முடிவு செய்கிறார்கள்.

19. முந்திரி பிசகில்லா—சிறிதும் பிசகில்லாத முந்திரி—ஒரு தமிழ்ப் பின்னம் மிகச் சிறிய அளவு.

20. தின்மை—தீமை- இது நன்மைக்கு எதுகையாக வந்த சொல்.

நாடிழந்தேகும் வழிதனிலே நன்மையைக் கேட்டிங்குவந்தோ
மையா

குண்டூரு ராஜா சொல்வது—மேற்படி சந்தம்

கொத்துப் பல்லாரியை யாண்டவனே, கோத்திர கம்பள
தோத்திரனே,
நாட்டை யிழந்திடக் காரணமேன், ஞாயமதைச் சொல்ல
வேண்டுமையா
தெச்சண தேசத்திற் கேகும்வகை திறனேசெப்பிட வேண்டுமையா

செல்லபொம்முதுரை சொல்வது

பன்னீரு வருடமு மாரியின்றி பட்டது கஷ்டங்கள் கம்பளங்கள்.
கஷ்ட மடைந்திட மாட்டாமல் மட்டிலாத் தெச்சணஞ்
சென்றதுகாண்.
கம்பள முன்செலக் கண்டதனு லன்புள்ள நாங்களுஞ்
செல்லுகிறோம்.

குண்டூரு ராஜா சொல்வது

முந்தின கம்பளம் போனாலும் பிந்தின நீரங்கு போகவேண்டாம்.
பஞ்சம் தெளிந்திடும் காலம்வரை யிங்கிரு மொன்றுக்கு
மஞ்சவேண்டாம்
காற்று மழை வெயிலல்லாமற் கவலை யென்னென்ன வந்தாலும்,
மாற்றிடு வேனெனச் சொன்னதற்கு மாறவேண்டாம் பதில்
கூறவேண்டாம்.

செல்லபொம்முதுரை சொல்வது

குண்டூரை யாள்கின்ற கோமானே, கொற்றவனே, நலமுற்றவனே.
தெச்சணமேகும் வழிதனிலே கீர்த்தியைக்கேட்டிங்கு
வந்தோமையா
வந்தவழியிலிருந்து கொண்டா லெந்தவிதந் தெற்கே போகிறது?
பெற்றவள் வீட்டிற்குப் போனாலும் பிள்ளைவிருந்து நாள்
மூன்றல்லவோ[21]
என்றபழமொழி கேட்டிருந்து மிவ்விதஞ்சொல்லிடக்
கூடுமோதான்?

---

21. பழமொழி - தமிழ்.

குண்டூரு ராஜா சொல்வது

கொத்துப் பல்லாரியை யாண்டவனே தோத்திர கம்பளத்
தோத்திரனே
தெச்சண பூமிக்கு சென்றிடவே செப்பினே னென்மன
தொப்பமில்லை.
ஆனாலுஞ் செல்வதற் குத்தரவு அன்புடன் தந்துநான் கும்பிடுறேன்.

செல்லபொம்முதுரை சொல்வது

கும்பிட்ட கைகட்கு நூறுவிசை கும்பிட்டேன், செல்லுகிறோம்
ராஜாவே
போற்றிய கைகட்கு நூறுவிசை போற்றியே செல்கிறோம்
ராஜாவே.

நகர் நீங்கும்போது என்னை யாண்டவளே என்று பாடிக்கொண்டு
போதல்—மன்னார் கோட்டை ராஜ சபை

மந்திரியே சர்வ தந்திரியே, வல்லவனே, ரெம்ப நல்லவனே,
தாமதமேனிங்கு காணவில்லை, சங்கதி யொன்றுமே தோணவில்லை.

மந்திரி சொல்வது

சங்கதி வேறென்ன செல்லபொம்மு இங்கே வருவதைச்
சாற்றினர்காண்.
சாற்றும் விடைதன்னைக் கேட்டுவந்தேன், போற்றுகிறேன் எங்கள்
ராஜாவே.

ராஜா சொல்வது

எங்குற்றார் எங்குற்றார் செல்லபொம்மு இங்கழைத் தோடியே
வாருமையா.

மந்திரி சென்று செல்லபொம்முதுரையை அழைப்பது

கொத்துப் பல்லாரி தேசம்விட்டுக் கும்பிடுந் தெய்வத்தை
கூடையிட்டு,
ஆடொடும் மாடுடன் வந்ததினால் அரசனழைக்கிறார் வாருமையா.

செல்லபொம்முதுரை என்னை யாண்டவளே என்று
பாடிக்கொண்டு போதல்

மன்னார் கோட்டையி லுள்ளவனே மங்களனே தரகங்கணனே
தெச்சணம் போகும் வழிதனிலே சீர்த்தியைக் கேட்டிங்கு
வந்தோமையா.

மன்னார்கோட்டை ராஜா சொல்வது

தெச்சணஞ் சென்றிடக் காரணமேன் தீரனே செப்பிட
வேண்டுமையா

செல்லபொம்முதுரை சொல்வது

பன்னீர் வருட மழையில்லாப் பஞ்சத்திலைதன் பஞ்சத்தினல்,
பஞ்சத்தினல்சென்ற கம்பளத்தைப் பார்க்கவேண்டுமிடர்
நீக்கவேண்டும்.

மன்னார்கோட்டை ராஜா சொல்வது

முந்தின கம்பளம் போனாலும் பிந்தின நிரங்கு போகவேண்டாம்.
பஞ்சத்தைப் போக்குதற் கிங்கிருந்தால் நெஞ்சத்திற் சற்றுங்
கவலை வேண்டாம்.

செல்லபொம்முதுரை சொல்வது

தாயிடம் பிள்ளை சென்றாலுஞ் செய்யத்தக்க விருந்துநாள்
மூன்றல்லவோ.
மூன்று நாளைக்குள்ளே போகாவிட்டால் முக்காடு போட்டமூ
வார்களையா,
போக விடைதர, வேண்டுமையா, புண்ணியனே தடையில்லாமல்.

மன்னார்கோட்டை ராஜா சொல்வது

சக்கம்மாள் பக்கத்திருந்து மிந்தச் சங்கடமாகுமா மன்னவனே
சங்கட மில்லாமற் சென்றிடுவீர் சக்கதேவி துணைபக்கமுற.

செல்லபொம்முதுரை புறப்பட்டு என்னை யாண்டவளே என்று
பாடிக்கொண்டு தங்குகின்ற இடமெல்லாந் தங்கி
குருமலை சேர்ந்தவுடன் இவ்விடந்தான் சரியென்று
ஆலோசனை செய்கிறது—மேற்படி சந்தம்

தம்பிகாளை பொம்முதுரை தங்குமிடந்தனைப் பார்த்தனையா ?
ஆடுகள் மாடுகள் மேய்வதற்கும் அப்புறந் தண்ணீர் குடிப்பதற்கும்
காலிநிலமிது போல்நமக்குக் கண்ணிலே பார்க்க முடியாது.

காளை பொம்முதுரை சொல்வது

அண்ணாவே அண்ணாவே கேளுமையா அன்புடன் தம்பிநான்
சொல்லுகிறேன்

வெள்ளாண்மை இல்லை, விளைவு மில்லை, வேந்தர்கள்காவலை
யல்லாமல்.
நஞ்சையுமில்லை, நடவுமில்லை, ராஜாக்கள் காவலை யல்லாமல்,
புஞ்சையும் இல்லை, பொழியுமில்லை, பூவேந்தர் காவலை யல்லாமல்.
காவலர் தம்மை வணங்கிக் கொண்டால் கண்டாலுந் துன்பங்கள்
செய்யமாட்டார்.
கொற்றவர் தம்மை வணங்கிக் கொண்டால் தும்பிட்ட கைகட்டு
வெட்டுமில்லை.
அப்படியே நமக்கான தெல்லாம் அமைக்கவேண்டு
மிமைப்பொழுதில்.

செல்லபொம்முதுரை சொல்வது

ஆடுகள் மாடுகள் வாழ்வதற்கு மஞ்சாது நாமரசாள்வதற்கும்,
மண்டிலே[22] கம்பளி போடுதற்கும், வந்தகுறிக[23]ளுரைப்பதற்கும்,
சக்கதேவி வசிப்பதற்குத்தக்க இலந்தைமுட் புக்குதற்கும்,
காட்டெலியு மொருகாப்புக்குள்ளே கோட்டெலியோடு
வசிப்பதுபோல்,
கோட்டெலிக்குப் புடையானுலுஞ் சொந்தப்புடை[24] வேண்டு
மென்பதுபோல்,
நமக்குரிய குடிசையிலே நம்மைவணங்கிட வாழவேண்டும்.

காளைபொம்முதுரை சொல்வது

அப்படியே செய்து வாழ்ந்திடுவோம் ஆண்டவள் பாதத்தைப்
போற்றிடுவோம்.
ஆண்டவள் பாதத்தைப் போற்றுவதால் அச்சமில்லை அவள்
பச்சமுண்டு.

செல்ல பொம்முதுரை குடிசைகட்டி வசித்து வருகிறநாளில்
ஆட்டுக்காரர் இவர்களைக்கண்டு செக்காரக் குடியிலுள்ள
கம்பளத்தாரிடஞ் சொல்வது—ஆட்டுக்காரர்
கம்பளத்தாரை வணங்கல்—மேற்படி சந்தம்

கம்பளத்தார்குலப் பார்த்திபரே காரணரே உம்மைக்
கும்பிடுறோம்.

---

22. மண்டு - குடியிருப்பு.

23. கம்பளத்தார் தற்காலத் தொழில் இது. பூர்வ காலத்தில் ஆடு, மாடு வளர்த்தல்.

24. புடை - வளை, (எலி வளை)

கம்பளத்தார் வினவுதல்

ஆயர்குலத்தி லுதித்தவரே அஞ்சலி செய்திடக் காரணமேன் ?
வஞ்சமில்லாத மனத்தவரே வந்தெம்மைக் கும்பிடக் காரணமேன் ?

ஆட்டுக்காரர் சொல்வது

ஆண்டவரே துரைப்பாண்டியரே அஞ்சாதவீர முடையவரே
கம்பளத்தார்குலச் செல்வர்களே, கண்டவதிசயஞ் சொல்லுகிறோம்.
எட்டயபுரம் பக்கத்திலே ஏற்ற குருமலைச் சார்பினிலே.
ஆடுமாடளவில்லாம லாமுநீளமுந் தோன்றவில்லை
உங்க ளுருவத்தைப் பார்க்கையிலே ஒருருவாகத் தோணுதையா

ஆட்டுக்காரர் சொன்னதைக் கேட்ட உடன் நமது
ராஜாக்கள்தான் அங்கே வந்திருக்கலாம். இப்போது
சென்று பார்க்க வேண்டுமெனக் கம்பளங்கள்
கெற்சிதம் - மேற்படி சந்தம்
பெரிய நாயக்கர் சொல்வது

ஒரே ஒரே முத்தாலு ஒக உத்த மாட்டலு செப்ப பொய்யேன்
அந்து ஒச்சின ராஜாவாரு அந்தறுனு மன தல்லி பிட்ட
ஈபோடுலு செப்பமாட்டா இங்க ஒகவிசை வின வண்டரு
அந்தரு ரண்டரா போத்தமுரா அய்யா வாறுத்த சூசவாலா
மச்சி தாலமு மொச்சேசே மங்குசாலமு பொய்யேசே
போத்தமுரா ஒரே போத்தமுரா போடுலா அந்தறு
போத்தமுரா[25]

கம்பளங்கள் புறப்பட்டு குடிசை சமீபமாக வரும்போது
காளை பொம்முதுரையும் தமையனும் பேசிக்கொள்வது.
மேற்படி சந்தம்

தம்பி காளைபொம்முதுரை சார்ந்தவர் யாரென்று பார்த்தனையா
நம்குலம் போலவே தோன்றுதையா ஞாயம் விசாரிக்க
வேண்டுமையா

25. இத்தெலுங்குப் பாடலுக்குத் தமிழ் மொழிபெயர்ப்பு.
ஏலே ஏலேமுத்தாலு ஒருநல்ல வார்த்தை சொல்லப் போறேன்
அங்கு வந்துள்ள ராஜாக்கள் அத்தனைபேரும் நம்தாய் பிள்ளைகள்
இந்தப் பசங்க சொல்லும் வார்த்தை இன்னும் ஒரு தடவை கேளுங்கடா
ஏல்லோரும் வாங்கடாபோக லாண்டா அய்யாமாரை பார்க்க வேண்டுமடா.
நல்ல காலம் வந்திட்டுது கெட்டகாலம் போயிட்டுது
போகலாம்டா ஏலே போகலாண்டா பசங்களா எல்லோரும் போகலாண்டா,

இருவரும் பேசிக்கொண்டிருக்கும் சமயம் கம்பளத்தார்கள் ராஜாவெனத் தெரிந்து நமஸ்காரஞ் செய்தல்.

ஆண்டவனே துரைப்பாண்டியனே அஞ்சாதவீர முடையவனே
கொத்துப் பல்லாரியை ஆண்டவனே கோடிநமஸ்காரம்
செய்தோமையா
எங்கள் நமஸ்காரம் உங்களுக்கு உங்களடியிணை எங்களுக்கு
நாங்களும் நீங்களும் ஒன்றெனவே ரட்சிக்க வேண்டுரோ
மித்தினத்தில்

செல்ல பொம்முதுரை சொல்வது

கம்பளத்தார்குல மோங்கிடவே நம்குல தேவதை காப்பவளே,
நம்பத் துணையெனக் காப்பவளே, நாட்டிற் றுலங்கிடச் செய்பவளே,
மாரியில்லாமலே நாடிழந்து வந்த நமக்கருள் சக்கதேவி,
என்னென்ன துன்பங்கள் வந்தாலும் இன்பங் கொடுப்பவள்
சக்கதேவி
உட்காரும், உட்காரும், நிற்கவேண்டாம், உண்டிஊப் பாருவீ
ருத்தமரே
காய மழியாம லிருந்ததானல் கண்களிற் கண்டு களித்திடலாம்,
ஆவியழியா திருந்ததானல் அங்கத்தைக் கண்டு களித்திடலாம்.
மாயவழிபோன மானிடர்கள் வந்தவர் யாரதைக் கண்டவர் யார்?

கம்பளத்தார் சொல்வது

தேசமிழந்திடுஞ் சீமையிலே தேர்ந்து கொண்டோ மொன்று
சேர்ந்து கொண்டோம்.
நேசமிழந்திடுஞ் சீமையிலே நேர்ந்துகொண்டோம்களி கூர்ந்து
கொண்டோம்.
நாங்களிருப்பது செக்கர்நகர், நன்ணிட வேண்டுமென்
றெண்ணுகிறோம்.
எம்முடனேவர வேண்டுமையா, ஈஸ்வரனே எங்கள் ராஜாவே.

செல்லபொம்முதுரை சொல்வது.

எம்மை யழைத்திடுங் கம்பளங்காளும்முடன் வரக்குற்றமுண்டோ?
உம்முடனேவரக் குற்றமுண்டோ, உண்மையிலின்றே
புறப்படுவோம்.

தாய் முத்தியம்மாளிடம் செக்காரக் குடி போவதாக உத்தரவு கேட்டல்

பெற்றவளே, எனக்குற்றவளே பிள்ளை யுனைத்துதி செய்தேனம்மா.
நம்குலக் கம்பளஞ் செக்கர்நகர்க் கன்புடன் நம்மை யழைப்பதனல்

போவதற்குத் தாரந்தாருமம்மா பொற்கொடியே மெத்தக்
கற்புடையாய்
தம்பியைக் கூட்டியே செல்வதற்கு தாயே உத்தாரந் தாருமம்மா

தாய் முத்தியம்மாள் சொல்வது

சக்கம்மை பாதவிசேஷ மதால் சந்ததியாய் வந்தகண் மணிகாள்,
கொத்துப் பல்லாரி தேசத்திலே கொண்டல் பொழியாத
காரணத்தால்,
தாயொடு பிள்ளைகள் கூடாத சங்கடங்கள் பல நேர்ந்ததனுல்,
இவ்விடந்தன்னிலி ருப்பதற்கே ஈசனமைத்தன னென் மகனே,
எத்தனை காலங்கள் சென்றுலும் ஏமன் வராவிடில் பார்த்திடலாம்.
ஓர்கோடி காலங்கள் சென்றுலும் உடம்பிருந்திடிற் பார்த்திடலாம்.
மாயவழி சென்ற மானிடரை மாறியும் பார்க்க முடியாது.

இரு பேரும் தாயை வணங்கல்

நம்குலத் தாரிடஞ் செல்வதற்கே நல்வாக்குத்தந்திட
வேண்டுமம்மா.
கம்பளத்தாரிடம் செல்வதற்கே கட்டளை செய்திட வேண்டுமம்மா.
செக்கர்நகர் சென்று வாரோமம்மா, சேவடி தாழ்த்தியே
தெண்டனிட்.டோம்.

இரு பேரும் செக்கர்நகர் சென்றவுடன் எட்டையபுரம்
சின்னமுத்து பெரியமுத்து என்ற காவற்காரர்கள்
ஆட்டைப் பற்றுவது - பெரியமுத்து சொல்வது·
மேற்படி சந்தம்

தம்பி கேளடா சின்னமுத்து சாமார்த்திய வேலை நடக்குதடா.
காவலை மீறியகாரியங்கள் காரணமாக நடக்குதடா.
ஏவலைமீறிய காரியங்கள் ஏதோ இங்கே நடக்குதடா.
மன்னனை மீறிய காரியங்கள் வஞ்சகமாக நடக்குதடா.
ஆரும் நுழையாத காவலிலே ஆடுமாடுகள் மேயுதடா.
மாடுடனுடுகள் மேய்வதற்கு மன்னரளித் தாராஉத்தரவு?
சீக்கிரஞ் சென்றதைப் பார்க்கவேண்டும் செல்வனிடத்திலே
சொல்ல வேண்டும்·
விரைவிற் சென்றதைப் பார்க்கவேண்டும் வேந்தனிடத்தேல
சொல்லவேண்டும்.
சல்தியிலே சென்று பார்க்கவேண்டும் தாமதமில்லாம
லோடிவாடா.

ஆட்டுக்காரரைக் கோபித்தல்

ஆரடா ஆரடா ஆட்டுக்காரா அஞ்சாமல் நிற்கின்ற சண்டாளா,
கோபம் வருவதைப் பார்க்கலையா, கூக்குரலிட்டதுங் கேட்கலையா?
மீசைதுடிக்குது,மேனியிலே வேர்வை யுண்டாவதைப் பார்க்கலையா?
கைத்தடி நிற்பதைப் பார்க்கலையா, கண்கள் சிவந்ததைப்
பார்க்கலையா?
உன்னுயிரே மனுக்காகுமுன்னே உண்மையைச் சொல்லடா,
ஆட்டுக்காரா.
எட்டயபுரத்து ராஜாவா லேற்பட்டதோ இந்த உத்தரவு?

ஆட்டுக்காரர் சொல்வது

அய்யாவே, அய்யாவே, வாருமையா, அன்புடனே சொல்லக்
கேளுமையா
எட்டைய புரத்து ராஜாவாலேற்பட்ட காரிய மொன்று மில்லை.
எங்கட்கதிபதி செல்லபொம்மு உங்கட்கதிபதி எட்டேந்திரன்,
எங்கட் கதிபதி யுத்தரவாலிங்கே ஆடுகள் மேயுதையா
உங்கட்கதிபதி எட்டேந்திர னுத்தரவுப்படி செய்யுமையா
எங்கட்கதிபதி செல்ல பொம்முக்கிந்த விபரத்தைச் சொல்லுகிறோம்

பெரிய முத்து சொல்லுவது

உங்கட்கதிபதி செல்ல பொம்மு உத்தரவுப்படி செய்ததனால்
எங்கட்கதிபதி எட்டேந்திர னிடத்திற்கேகுது மாடாடு

எட்டையபுரத்து ராஜசபை

ஆரய்யா ஆரய்யா பேஷ்தாரா அங்கங்கேதீர்வை வசூலாச்சா?
தீர்வை வசூலிலே பாக்கியுண்டா, சேர்ந்திடும் பண்ணையிற்
சோலியுண்டா?
சம்பளக்காரர்க்குப் பாக்கியுண்டா, சர்க்கார் தீர்வையிற்
பாக்கியுண்டா?
இவ்வருட வருமானத்திலே ஏற்பட்டமிச்ச மேதேனுமுண்டா?
வழிவழியாகவே வந்த தெய்வம் வையகத்தார்கள்
வணங்குங்கந்தன்,
கந்தனிருப்பது செந்தியிலே காவல் புரிதல் கழுகுமலை.
வைகாசி மாசி தை மாசத்திலே வாரவர் போரவர் கோடியுண்டு.
பிரார்த்தனைக் காவடிக் காணிக்கையும் பேரிட்ட காணிக்கை
கோடியுண்டு.
இவ்வித காரியந் தப்பியிருந்தா லெனிடஞ் சொல்லிட
வேண்டுமையா.

பேஷ்காரர் சொல்வது

தாழைமடலின் மணஞ்சொரியச் சந்தணத் தேக்கில் பொங்கமுற
தென்னை கமுகு குலைபோடச் சிறிய வாளைமீன் மாறிவிழ
வாழைபலா வில்ப்பழம் பழுக்க மந்திக் குரங்குகள் பந்தாட
கோகிலங்கூவிய சோலையிலே கொற்றம் பொருந்திய தெட்டைநகர்
எட்டை நகரதிகாரத்திலே எள்ளவுங் குற்றமில்லை மன்னா

அச்சமயத்தில் பெரியமுத்.து சொல்வது

வீராதி வீரனே, எட்டமன்னா, விக்கிரமாதித்த பூபதியே,
இன்று நடந்திடும் செய்திகளை இன்பமுடன் சொல்லக்
கேளுமையா.
நம்மதிகாரத்தி னெல்லையிலே நண்ணுங் குருமலைச் சார்பினிலே,
ஆரோ ஒரு பயலாடுகளை அஞ்சாமல் மேய்த்தென்னைக்
கெஞ்சுகிறார்.
செல்ல பொம்மென்று பேர் சொல்லுகிறான் சேவிக்கிறான் தன்மை
பாவிக்கிறான்.
குச்சுகள் தோன்றுது பக்கத்திலே கூவியே தெற்குக்கு ஓடுகிறான்.
ஓடுகிறான் சக்திதேவி துணையுண் டெனக்கும் பிட்டகையுடனே

ராஜா சொல்வது

காவலை மீறிய செய்கையிலே கண்டிப்புச் செய்திட வேண்டுமடா.
ஆணைமீறிய செய்கையிலே அவனைத்தண்டிக்க வேண்டுமடா.
ஏவலைமீறிய செய்கையிலே யீஸ்பரனானாலுந் தோஷமில்லை.
வார்த்தையை மீறிய செய்கையிலே வம்புகள் செய்தாலும்
தோஷமில்லை.

இங்கிப்படியிருக்க செக்காரக் குடியில் கம்பளத்தாருடன்
வீற்றிருக்குஞ் செல்லபொம்முதுரைக்கு ஆட்டுக்காரர் சொல்வது
மேற்படி சந்தம்

பூதலனே கருணாகரனே, போற்றுகிறோந்துதி சாற்றுகிறோம்

செல்ல பொம்முதுரை கேட்பது

என்ன அவசரமிங்கு வந்தீ ரெனக்கறியவே சொல்லுவீரே

ஆட்டுக்காரர் சொல்வது

செல்வர்க்கழகிய சீராளா, செல்ல பொம்முதுரை, கேளுமையா.
எட்டையா புரத்து ராஜாவா லேற்பட்ட காவல்கள்
மெத்தவுண்டாம்,

காவலருத்தர வில்லாமற் காலடி வைக்க முடியாதாம்.
மன்னவருத் தரவில்லாமல் மாடாடு மேய்ந்திடக் கூடாதாம்.
அம்மலை காப்பவர் சின்னமுத்தாம் அவனுக்கண்ணன்
பெரியமுத்தாம்.
அண்ணனுந் தம்பியு மோடிவந்தார், ஆட்டையும் மாட்டையுங்
கொண்டுபோனார்.
எங்கள் துரையிடவாருமென்று ரெட்டையா புரத்தை
சேர்ந்திருப்பார்.
நாங்களும் நில்லாமலோடி வந்தோம். ராசனே உம்மையுங்
கண்டோமையா.
கண்களிற் கண்ட அதிசயத்தைக் காரணமாகவே சொன்னேனமையா.
காரணமாகவே சொன்னேனமையா காலைவணங்குகிறோம்
நூறுவிசை.

ஆட்டுக்காரர் சொன்னவுடன் செல்ல பொம்முதுரை
உடனே புறப்படுகிறது—மேல்படி சந்தம்

தம்பிகாளை பொம்முதுரை, சல்திபுறப்பட வேண்டுமையா,
எட்டையபுரம் போகவேணுமிப்போதே ராஜாவைப் பார்க்க
வேணும்.

காளை பொம்முதுரை சொல்வது

தங்களினுத்தர வண்ணவே, தலைக்குமேலே, விளம்புகிறேன்
எட்டையபுரம் போகவேணு மிப்போதே ராஜாவைப்
பார்க்கவேணும்.
சீக்கிரஞ் சென்றிட வேண்டுமையா தென்னிள சைப்பதி
மன்னனிடம்.

கம்பளத்தார்கள் தயவாலே காரணமாகப் புறப்படுவோம்.

செல்ல பொம்முதுரை கம்பளத்தாரிடம் விடை
கேட்டல்—மேற்படி சந்தம்

அய்யாவே அய்யாவே கம்பளங்காள், அன்புடனே சொல்லக்
கேளுமையா.
தென்னிளசைப் பதி செல்லவேண்டுஞ் சீக்கிரமாக விடைகொடுப்பீர்.

கம்பளத்தார் சொல்வது

சக்கம்மாள் பாதவிசேஷமதால் சங்கடம் வந்தாலும் தீர்ந்துவிடும்.
போய்வாரும் போய்வாரும் புண்ணியரே, பூபதியே எங்கள்
ராஜாவே

எட்டையபுரம் ராஜசபை—மேற்படி சந்தம்

அய்யாவே அய்யாவே பேஷ்காரா, அன்புடனே சொல்லக்
கேளுமையா.
தென்னிளசைப்பதி சீமையிலே சேர்ந்தகுடிகளின் வாழ்க்கையிலே.
செய்யு முறைமைகள் தப்பினரா, சேதிகளென்ன விளம்பிடுவாய்.

பேஷ்காரர் சொல்வது

செய்யு முறைமைகள் தப்பவில்லை, சேதிகளொன்றிங்கே வந்ததுவே
செல்லபொம்மு, காலைபொம் மெனவே சேர்ந்தவர் சோதர
சோதரராம்.
ராஜாவைப் பார்த்திட வேணுமென்று நம்பிக்கை கொண்டிங்கு
வந்தனராம்.

ராஜா சொல்வது

அன்னவரை யாரெனப் பார்க்கவேணும் அவரையிங்கே
யழையுமையா[26]
ஆர்காணும் நீர் [27] வந்த தன்மைகளை அன்புடனே சொல்லக்
கேளுமையா[28]

செல்ல பொம்முதுரை செல்வது

எங்கட்கிருப்பு வடதேசம் இப்போதிருப்பது தென்தேசம்.
தெச்சண பூமியைப் பார்க்கவென்று செய்தனளே
சக்கதேவியம்மாள்.
மாரியுமில்லை மழையில்லை மாடாடு நிற்பதற்காசையில்லை.
நாட்டிலிருக்குங் குடிகளெல்லாம் நாமமில்லாமலே ஓடினர்காண்.
நாங்களும் வந்திங்கே பார்க்கையிலே நண்ணுதற்கான
குருமலைதான்.
வாழ்ந்து வருகிறோம் ராஜாவே வஞ்சமில்லைகாண் பாருமையா.

26. இது எட்டையபுரம் ராஜா பேஷ்காரிடம் சொல்வது.

27. இது அழைத்த பின் வந்த செல்ல பொம்மு, காலை பொம்முவிடம் எட்டையபுரம் ராஜா கேட்பது

28. இது செல்ல பொம்மு, காலைபொம்மு ஆகியவைகளின் பதில். (இவை யனைத்தும் நாடகமேடையில், அவர்களை நோக்கித் திரும்பிப் பார்த்தும் பேசுவார்கள்)

எட்டையபுரத்து ராஜா சொல்வது

நல்லது நல்லது உன்மனம் போல் நடப்போ மொன்றுக்கு
மஞ்ச வேண்டாம்.
மாதமொருகிடாய் கொம்புடனே வந்த உடன் பேட்டி
காணவேண்டும்.
பாற்குட மேழும் வரவேண்டும், பண்ணையிலாடுகள் மேய்க்க
வேண்டும்.
இந்தப் பிரகாரஞ் செய்தீராஞலெந் நாளு மிங்கே வசித்திடலாம்.

செல்லபொம்முதுரை சொல்வது—மேற்படி சந்தம்

மன்னவனே நீர் சொல்லு முத்தரவை மாறி நடந்திடோம்பூமியிலே
செல்லவிடை தரவேண்டுமையா தென்னிளசைப்பதி காவலனே.

உத்தரவு பெற்றுக் கொண்டு இருப்பிடம் வந்து சேர்ந்து சில நாளையில் கொண்ட பொம்முதுரை பிறத்தல்—செல்ல பொம்முதுரை புத்திரப்பெருமை யுரைப்பது—விருத்தம்

ஒன்பது லக்க மிட்ட உறுதிசேர் கம்பளத்தில்
பொன்பணம் பெருகற்கான புத்திரனவதரித்தான்
சம்ப்ரமச்சரித ஞான தண்டமிழ்க் கொண்ட பொம்மன்
இம்பரிலெவரும் போற்றற் கென்னுள மகிழத் தானே

தன்னனச் சந்தம்

மைந்தன் பிறந்திடும் நாளையிலேயே மங்கள நாத முழங்குதையா
செல்வன் பிறந்திடும் நாளையிலே சீதளக் கற்பகம் வீசுதையா
பிள்ளைக் கவலை பெருங்கவலை எள்ளத்தனையில்லாதோடியதே
சக்கமை பாதவிசேஷ மதால் சங்கட முற்றுலுந் தீர்ந்திடுமே.

கொண்டு பொம்முதுரை பிறந்த சில நாளைக்குப் பின்னர் விவாகஞ் செய்தல்—செல்லபொம்முதுரை சொல்வது மேற்படி சந்தம்

தம்பிகாளை பொம்முதுரை சங்கதி சொல்லிடக் கேளுமையா
சின்னவயது சிறுவயது சேர்ந்தது ப்ராயம் பதினாறு
இந்தவயதிலே மைந்தனுக்கு இன்பமுடன் மாலை சூடவேண்டும்.
மாலைக்கழுத்தையும் பார்க்க வேண்டும் மைந்தற்கு மைந்தன்
பிறக்க வேண்டும்.

செக்க நகருள்ள கம்பளத்திற் செல்லக் கலியாணம் செய்ய வேண்டும்
மாப்பிள்ளைக்கான பெண்பார்க்க வேண்டும் வாழையடி வாழை
யாக வேண்டும்.

கொண்ட பொம்முதுரைக்குக் கல்யாணம் நடந்த சில
நாளைக்குப்பின் கட்டை வெட்டையிலே கட்டபொம்முதுரை
பிறந்தனுல் கட்ட பொம்மு என்று பெயர் வைத்தும்
பின்னுல் ஊமைத்துரை முதலானவர்கள் பிறந்ததையும்
சொல்வது—மேற்படி சந்தம்—கொண்டுபொம்முதுரை சொல்வது

புஞ்சை நிலங்களைச் சேர்க்கையிலே புத்ரன் பிறந்தனனெந்தனுக்கே
கட்டையை வெட்டையிலுற்றதனுல் கட்ட பொம்மென்று
பேரிட்டழைப்பேன்
ஊமைத்துரை பிறந்தார் மணிபோலுடன் பிறந்தனள் வெள்ளை
யம்மாள்
வீரமல்லு திம்மி பாஞ்சாலி விரசக்கு பொம்மியுற் பவித்தார்.[29]
மக்கள் சம்பத்துப் பெருகிடவே வந்தருள் செய்தனள் சக்கதேவி
நாளொரு மேனிபொழுதொரு வண்ணம் நலம்பெற வாழ்வதற்
கன் பளித்தாள்
செல்வமில்லாதுற்ற எங்களுக்கு சேயர்கிடைத்ததே தெய்வச் செயல்
முள் முறியாமல் முருங்கைப்பூ வாடாமல் முற்றிலுங்காப்பவள்
சக்கதேவி

கட்டபொம்மு ஊமைத்துரை பிறந்தவுடன் வாலிபமான
பின்னர் கொண்டு பொம்முதுரை வழக்கப்படி எட்டைய
புரத்திற்கு சங்கராந்திப் பொங்கலுக்குப் போக கட்ட பொம்மு
துரையிடம் சொல்வது—கொண்டு பொம்முதுரை சொல்வது
மேற்படி சந்தம்

கட்டை வெட்டையிலே பிறந்தாய் கட்ட பொம்மென்று நாமங்
கொண்டாய்
நான் பெற்ற கண்மணி கட்டபொம்மு நானொன்றுரைத்திடக்
கேளுமையா
எட்டைய புரம் ராஜாவாலேற்பட்ட காரிய மொன்றுளது.
பாற்குடமேழ்கிடாயொன்றுடனே வாக்குத்தவருமற் போக
வேண்டும்.

29. இக்கதையின்படி கட்டபொம்முடன் பிறந்தவர்கள் ஊமைத்துரை
வெள்ளையம்மாள், வீரமல்லு, திம்மி, பாஞ்சாலி, வீரசக்கு, பொம்மி.
வேறு கதைகளில் வேறு விதமாகவும் கூறப்படும்-

சங்கராந்திப் பொங்கல் வந்ததனுல்தாமத மில்லாமற் போக
வேண்டும்.
தம்பியுடனிங்கு வீற்றிருப்பாய் சற்குணவானே என் கட்ட
பொம்மு.

கட்டபொம்முதுரை சொல்வது—மேற்படி சந்தம்

அய்யாவே அய்யாவே நீர் கேளும் அன்புடன் நானென்று சொல்லு
கிறேன்.
எட்டைய புரத்து ராஜாவை இப்போதே நாங்களும் பார்க்க
வேண்டும்.
இப்போதே நாங்களும் பார்க்க வேண்டும், எங்களைக் கூட்டியே
போக வேண்டும்.
எங்களைக் கூட்டியே போகவேண்டும் இல்லா வழக்கத்தை நீக்க[30]
வேண்டும்.

கொண்டு பொம்முதுரை சொல்வது

நான் பெற்ற பாலகா கட்டபொம்மு ஞாயமில்லா வழி செல்லாது
முன்னோர் வழக்கத்தை நம்மாலே முந்த்ரி பிசகுகள் செய்யலாமா?

எட்டையபுரத்து ராஜ சபை

ஆரய்யா ஆரய்யா பேஷ்காரா அன்புடனே சொல்லக் கேளுமையா
செல்லபொம்முதுரை சென்ற பின்னே சேயன்ன வருங் கொண்ட
பொம்மு
கொண்ட பொம்முதுரை வந்தனரா கொற்றவன் வார்த்தையை
மீறினரா ?
காடுவெட்டி நிலம் சேர்க்கச் சொன்னேம் பாடுபட்டதிலே வாழச்
சொன்னேம்.
பாடுபட்டதிலே வாழச் சொன்னேம் பண்ணையிலாடுகள்
மேய்க்கச் சொன்னேம்
சங்கராந்தியில் நம்மைவந்து சந்திப்புக் கின்றும் வரவுமில்லை

30. இந்த வழக்கம் கப்பம் கட்டுவதற்கொப்பானது. எட்டையபுரத்தாருக்கு அடங்கி வாழக் கூடாது, சுதந்திரமாக வாழ வேண்டுமென்று இளைஞன் கட்ட பொம்மு சொல்லுகிறன். எனவே இவன் எட்டையபுரத்திற்குப் போனல் பணிந்து திரும்பமாட்டான் என்பது முன் கூட்டியே தெரிகிறது.

ராஜ சபையில் இவ்விதம் கேட்டுக் கொண்டிருக்கும்போது கொண்டு பொம்முதுரை தன் புத்திரரோடு சந்தித்தல் கொண்டு பொம்முதுரை சொல்வது

மேற்படி சந்தம்

அய்யனே எட்டப்ப ராஜாவே அன்புடனோர் வார்த்தை சொல்லு
கிறேன்.
ஆண்டவன் வாக்குக் கெதிர்வாக்கு அஞ்சாமற் சொல்வாரோ
பூமியிலே.
சொன்ன கிடாயுடன் பாற்குட முஞ்சொன்னது போற்கொண்டு.
வந்தோமையா
பூபதியே உங்கள் புண்ணியத்தால் புத்திரபாக்கியம் பெற்றெடுத்
தேன்.
முன்னே பிறந்தவன் கட்டபொம்மு, பின்னே பிறந்தவனூமத்துரை
உங்கள் சமூகத்தைப் பார்க்கவென்றே ஓடியே வந்தனரென்
பிறகே.

எட்டையபுரத்து ராஜாவுக்குக் கட்டபொம்முதுரையும் ஊமைத்துரையும் வணங்காமல் நிற்கிற படியால் கோபமாக உரைத்தல்—மேற்படி சந்தம்

ஏழை மதியுள்ள உங் களுக்கு எங்களைப் பார்க்கவும் ஞாயமுண்டோ?
மூட மதியுள்ள உங்களுக்கு முன்னே நிற்கவும் ஞாயமுண்டோ?
எட்டைய புரஞ்சீமையிலே என்னை வணங்காத பேர்களில்லை.
ராஜமரியாதை செய்யவில்லை நல்லோர் பழக்கமுஞ் செய்யவில்லை,
நல்லது நல்லது கொண்ட பொம்மு வல்லபம் பேசிட வந்தனையா?
துஷ்டப்பிள்ளைகள் பெற்றவர்க்கு துன்பங்கள் கடோசியில்
மெத்த உண்டு[31]
செல்ல பொம்மு துரை போன போதே செய்கையுங் கூடவே
போயினதோ?

இப்படிச் சொல்லக் கட்டபொம்மு துரைக்குக் கோபம் பிறந்து சொல்வது-மேற்படி சந்தம்

ஏற்பட்ட பாற்குடமேழுடனே யேற்குங்கிடா யொன்று கொண்டு
வந்தே,
கட்டளுங் கப்பங் கொடுத்திடவோ மட்டிலா வீரம்
படை

31. கடோசி—கடைசியின் மரூஉ

மன்னவன் கப்பங் கொடுத்திடவோ வையகத்தார்கள்
நகைத்திடவோ?
எம்மை வரவேண்டாமென்று சொன்னுலிங்கே எதற்கு வாரமையா?
இங்கே எதற்கு வாரமையா, இப்போதே நாங்களும்
போருமையா.
சின்னவயது பெரிதாகிச் சீமையெல்லாங் கட்டியாளுவதும்
வாழ்ந்தவர் தாழ்ந்தவ ராகிறதும் வையகத்தைய மெடுப்பதுவும்
யார் செயலாலே முடிந்ததையோ, ஆண்டவன் செயலே யல்லாது?
எமக்குத் தாந்தா நீராகையி னுலிங்கே வந்தது கட்டபொம்மு
இப்படியென்று தெரிந்த பின்னுலிங்கே வருமோ கட்டபொம்மு ?

எட்டையபுரத்தில் கையொடு புறப்பட்டு குருமலைச் சார்புக்கு வந்ததும்
கொண்ட பொம்முதுரை பயந்து சொல்வது—மேற்படி சந்தம்
கொண்டபொம்முதுரை சொல்வது

சக்கம்மாள் பாதவிசேஷ மதால் சந்ததியாய் வந்த கட்டபொம்மு
எட்டைய புரத்து ராஜாவா லேற்பட்ட காவலி தாகையினுல்
பண்டைப் பழக்கங்களில்லை சண்டை பிடித்தன ரென்மகனே
நாமினி வாழ்வது செக்கர்நகர் நண்ணிடத்தாமதஞ் செய்ய
வேண்டாம்

இவ்விதம் சொன்னவுடன் கட்டபொம்முதுரையுடன் இசைந்து
ஆடுமாடுகளுடன் புறப்பட்டு செக்காரக்குடி போதல்
ஆண்டவனே என்று பாடவும்—மேற்படி சந்தம்

கம்பளத்தார் வரவேற்பு

ஆண்டவனே எங்கள் ராஜாவே அன்புட னெல்லோருங்
கும்பிடுறோம்
எவ்விடஞ் சென்றாலும் வந்த பின்னுலினத்தி லோடயே
சேரவேண்டும்
என்ற பழங்கதைபோல வந்திரெங்களை ரட்சிக்குந் தாதாவே
எங்கள் குடிசுடனுங் களுக்கும் ஏற்றகுடி சில மைத்திடுவோம்.
வேலியிலுள்ளே பயிர்போலும் மேகத்திலுள்ளே மழைபோலும்.
நாங்களும் நீங்களும் சேர்ந்திருந்தால் ஞாயம் பிறந்திடும் பூமியிலே

கம்பளத்தார் வரவேற்பால் காலங்கழிக்கையில் கொண்ட பொம்முதுரை காலஞ் சென்ற பின்னர் கட்டபொம்முதுரை ஊமைத்துரை அதிக பராக்கிரமமான காலமுண்டாதல் என்னை யாண்டவளே என்று பாடவும்—மேற்படி சந்தம் (பராக்கிரமம்)

தம்பிதம்பி ஊமைத்துரை சக்கம்மாள் வாக்கு விசேஷமதால்
வேந்தரெல்லாம் நம்மைப் போற்றவேணும், வெற்றிக் கொடியினை நாட்டவேணும்.
மன்னவரெல்லாம் போற்ற வேணும், மானிடர் கெர்வத்தை மாற்றவேணும்.
பூமி பணங்களை சேர்க்கவேணும், போரினிற் கியாதி யடைய வேணும்.
கிராமாதி காரங்கள் செய்யவேணும், கிரீடம் புனைந்தரசாள வேணும்.
ஈட்டிபாலா எடுக்கவேணும், எப்போதும் கோபத்தைக் காட்டவேணும்.
வெற்றி தோர்வைகள் [32] பார்க்கவேணும் வீணான காரியத்தைப் போக்கவேணும்.
தொண்டைக் குழியிலுயிரிருந்தால் தோக்கல வார்குலம் சாகாது.
தோக்கல வார்குல கம்பளத்தைச் சொந்தப் படையாகச் சேர்க்க வேணும்.
சொந்தப் படையோடு வந்தபடைகளுந் துணைப்படையாகச் சேர்க்கவேணும்.
இந்தப்படி நாமள் செய்தோமானால் ஏதுநமக்கெதிர் பூமியிலே?

ஊமைத்துரை பராக்கிரமம்

தூத்தேர் மாதரி மாதரிச் சேரா [33] தொண்டர்க்குத் தொண்டனா னூமத்துரை.
ஊமைத்துரை யென்றென் பேரைச் சொன்னாலூரக்கம் பிறக்குமே மற்றவர்க்கு.
கட்ட பொம்மென்று பேரைச் சொன்னால் கண்டவர் நெஞ்சம் திடுக்கிடுமே
சக்கதேவி யென்று பேரைச் சொன்னாற் சங்கடமோடுமே காதவழி.

32. தோர்வை - தோல்வி (பா. வ. நெல்லை)

33. உருது வசைச்சொல்.

இருவரும் பராக்கிரமம் மேலிட்டு உலகதுன்பங்கள்[34] செய்துவரும் நாள் குருமலை வேட்டையில் எட்டையபுரத்தாரும் வேட்டையாடையில் பன்றி வழக்கு—கட்டபொம்முதுரை சொல்வது

மேல்படி சந்தம்

பன்றி இறந்தது எம்மாலே பன்றியைக் கண்டது உம்மாலே
காயங்கள் பட்டது எம்மாலே கண்களிற் கண்டது உம்மாலே
குண்டுகள் பட்டது எம்மாலே கோபம் பிறந்தது உம்மாலே
ஈட்டிகள் தைத்தது எம்மாலே எதிரே கண்டது உம்மாலே.

எட்டையபுரத்தார் சொல்வது

மேல்படி சந்தம்

ஆராலிறந்தாலு மெந்நகர் வந்தறிக்கை செய்து நீர்போகவேண்டும்
எவராலிறந்தாலு மெந்நகர் வந்திந்த வழக்குகள் தீரவேண்டும்
என்பன்றி உன்பன்றி யென்றுரைத் தாலிந்த வழக்குகள்தீர்ந்
திடுமோ
போவென்றும் வாவென்றும் சொல்வதனுற் புண்ணிய முண்டுமோ
மன்னர்களே.

இருபேருக்குந் தர்க்கமாக மீறிய செய்கையால் செக்காரக்குடி சேர்ந்து பின்னுல் சாலிகுளம் பக்கம் வேட்டையாடையில் நாயை முயலெதிர்க்க அந்த இடத்தைக் கண்டு சொல்வது.

தம்பிதம்பி ஊமைத்துரை சம்பிர தாயக் கதை கேட்டனையா ?
சாலி குளத்துப் பக்கத்திலே சார்ந்திடுஞ் செம்மணல் மேட்டினிலே
காடைவேட்டை யாடையிலே கண்ட வதிசயஞ் சொல்லுகிறேன்·
முன்முயல் சென்றிடப் பின்னே நாய் முடுக்க மேட்டுக்குப்
போனவுடன்
பின்னேடும் நாயை விரட்டுதுபார் முன்னேடுகின்ற முயலினையே[35]

34. பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் நாடகம், கூத்து முதலியவற்றைப் பார்க்கப் போலீசார் வருவார்கள். இடையிடையே கட்டபொம்முவைத் துஷ்டன் என்று இகழ்ந்து பேசினுல்தான் நாடகம் நடக்கவிடுவார்கள் எனவே பொதுவாக கட்டபொம்முவைப் புகழ்ந்து பாடும் கதைப் பாடல்களில் இடையிடையே அவனைப் பழித்தும் இழித்தும் கூறும் பகுதிகள் கலந்து காணப்படும்.

35. இதே கதை ஐவர் ராஜாக்கள் வேட்டைக்குப் போன இடத்தில் வள்ளியூர் கோட்டை கட்டவேண்டிய இடத்தில் நடந்ததகாகக் கூறப்படும். பலகதைகள் வீரம் மிகுந்தவர்கள் வாழ்ந்த கோட்டைகளைப் பற்றி இத்தகைய கதைகள் உண்டு.

நாயை முயல்வெற்றி கொண்டதனுல் நாமிதில் கோட்டைகள்
போடவேண்டும்.
ஓங்கிய பாஞ்சாலி பக்கத்திலே ஒருங்குறிச்சியைச் சேர்க்க
வேண்டும்.
தங்கச் சிம்மாதனம் போடவேண்டும் தாச்சியில்லா[36] தரசாள
வேண்டும்.
எண்ணினகாரிய மீடேற எப்போதுங் காப்பவள் சக்கதேவி.

இருபேரும் அந்த இடத்தில் அடையாளம்போட்டு வல்ல நாட்டுப்
பக்கம் வர சிறுபையனழுங்குரல் கேட்க அங்கே சென்று
பார்த்தல்—மேற்படி சந்தம்—பாதர் வெள்ளை துக்கம்.

என்னைப் படைத்திடு மீஸ்பரனே யிதென்ன சங்கடங் கர்த்தாவே
தாயுடன் கோபித்து வந்ததிலே சங்கடம் வந்ததே என்ன
செய்வேன்.
கொண்டையன் கோட்டை[37] வம்மிசத்தில் கோவென நின்று
புலம்பிடவோ
நீரில்லாச் சேற்றிலே கால்கள் பட்டு மாறியெடுக்கவும்
கூடுதில்லை
அங்கம் நடுங்குதே தாகமதா லாவியொடுங்குதே தெய்வங்களே
ஆருமறியாரோ என்குரலை ஆபத்தை நீக்காரோ புண்ணியர்கள்.

கட்டபொம்முதுரை சொல்வது—மேற்படி சந்தம்

வாய் பேசாப் பாண்டியா ஊமைத்துரை மைந்தனழுங் குரல்
கேட்டனையா?

ஊமைத்துரை சொல்வது—மேல்படி சந்தம்

என்ன வருத்தமோ யார் பிள்ளையோ இப்போதே சென்றுநாம்
பார்க்கவேண்டும்.

கட்டபொம்முதுரை உடனே கைவிரலை நீட்ட ஓர் லாகையால்
வெளியே வரப் பாதர் வெள்ளையென்று பட்டங்கொடுத்தது
மேற்படி சந்தம் - கட்டபொம்முதுரை சொல்வது

ஆரோ அறியாத பாலகனே அஞ்சாமலென்விரல் பற்றிடுவாய்
என்விரல் பற்றியோர் லாகையினுலிங் கெழுந்தோடிவா
பொங்கமுடன்

36. தாச்சி-தாழ்ச்சி, தாழ்வு. (பா -வ)
37. மறவர்களில் ஓர் பிரிவு.

பற்றிய கையுடன் வந்ததனுல் பாதர்வெள்ளையென்று கூப்பிடுவேன்.
கூப்பிடுவேன் பாதர் வெள்ளையென்றே கொடுத்தபட்டம்
நிலைத்திடவே

கட்டபொம்முதுரை வெள்ளையன் வரலாற்றைக் கேட்டுத் தம்பியுடன்
சென்று அடையாளம் போட்ட இடத்தில் கோட்டை போடுகிறது
மேற்படி சந்தம்—கோட்டையின் பெருமை

வாய் பேசாப் பாண்டியா ஊமைத்துரை வல்லபம் பார்க்கலா
முள்ளவரை,
கோட்டையலங்காரம் பார்க்கையிலே கொண்டலுறங்கிடும்
பாங்குறவே.
வானத்திலே கொடிவீசையிலே வந்தனஞ் செய்யுமே காற்றினங்கள்
மேகத்திலே கொடிவீசையிலே நீர்த்துளி வீசிடுமே,
தேவபுரி சென்று பார்க்கையிலே சிந்திடுமே நவரத்தினங்கள்
எங்கும் விளம்பரஞ் செய்யயிலே ஏங்கிடுவார் பயமோங்கிடவே
சந்திரரோடிய பாதையிலே தடைகள் செய்திடுங் கோட்டையது,
சூரியரோடிய பாதையிலே துணிவு பேசிடுங் கோட்டையிது.

கோட்டையிட்டு ஆயிரங் கம்பளம் நூறுபரிவாரத்துடன் அரசு
செய்யப் போகிற சமயம் கட்டக்கருப்பணன் சுந்தரலிங்கம்
சரண் புகல்—மேற்படி சந்தம்

தோக்கலவார் குலபார்த்திபனே தொண்டனடைக்கலஞ்
சேரவேண்டும்.
பாலனடைக் கலஞ்சேரவேண்டும், பார்வையிற் சேவகஞ் செய்ய
வேண்டும்.
சேவக வேலையுந் தந்தாக்கால் திக்கு விஜயம் புரிந்திடுவேன்
கெவுனகிரிப்பள்ளி புண்ணியத்தால் கீர்த்தி கிடைத்தது ராஜாவே.

கட்டபொம்முதுரை சொல்வது—மேல்படி சந்தம்

சக்கம்மாள் வாக்குப்பலித்ததடா சந்ததி போல்வந்த சுந்தரலிங்கம்
பாஞ்சாலி வாக்குப் பலித்ததடா பாலனைப்போல் வந்த
சுந்தரலிங்கம்.

---

38. வெள்ளையதிகாரிகளின் வருணனைகளிலிருந்தும், தற்காலம் நடைபெற்ற அகழ் வராய்ச்சிகளிலிருந்தும் இக்கோட்டை மண்கோட்டையென்பதும், மிக சிறியதென்பதும் விளங்குகிறது. ஆனல் வீரத்தால் புகழ்பெற்றவர்கள் பாதுகாத்த கோட்டையாதலால் இதனைப் புலவர், இராவணன் கோட்டையைக் கம்பனும், அருணசலக் கவிராயரும் வருணிக்கும் பாணியில் வருணிக்கிறர்.

கட்டக் கருப்பணன் சுந்தரலிங்கமென மட்டிலாப் பேருங்
கொடுத்தேனடா
ஆயிரம் கம்பளம் நூறுபரிவார மதற்கு நீ யொருவீரனடா

தானுபதி சரண்புகல்—மேற்படி சந்தம்

வாருங்கோ வாருங்கோ பிள்ளை மகனே உன் வல்லமையாவையுங்
கூறுமையா
கங்கை குலத்திலுதித்தவரே காரணம் யாவையுங் கூறுமையா

தானுபதி சொல்வது—பல்லவி

நாட்டினிலுள்ள கணக்குகள் யாவும் நலத்தில் முடித்திடுவேன்
நாடாலோபர்[39]களென் ருலுங்கல் நார் போலுரித்திடுவேன்
நஞ்சைப் பகுதிகள் புஞ்சைக் கிடுவதும்
புஞ்சைப் பகுதிகள் நஞ்சைக் கிடுவதும்
நாணயஞ் சேர்ப்பதும் என்னுல்தான்.
நாடகத் தீர்வையும் ராகத்தீர்வையும்
லாபத்தீர்வையும் நாலாத்தீர்வையும்
நயங் கொண்டெழுவ தென்னுல்தான்.
லஞ்சந் தரவில்லை யென்று தெரிந்தால்
ராஜனென்ருலும் யோஜனை செய்யேன்.
நயந்து கெடுப்பது மென்னுல் தான்
நட்புடன் வந்தவரென்று தெரிந்தால்
நஷ்டந் தெண்டத்தீர்வை கொடுத்தபின்
ஞாயம் பிறப்பது மென்னுல்தான்.
மிஞ்சு மனுதிபுரம் போக்குண்டதில்
விரும்பிய தர்க்காஸ்த்துந் தருவேன்பின்
விரட்டியடிப்பது மென்னுல்தான்
விள்ளவர் கரியவர் சுப்ரமணிய
பிள்ளை யென்றுரைப்பதும் பிரியப்படுவதும்
மேல்யோசனைகளும் என்னுல்தான்.
விபரீதம் பல புரிவா மெனிலவர்
குடிபோகுங் கெதி தெரியாது எனக்
கதிகாரங் கொடுத்திடு வீரேலெந்
நாட்டையுமோர் கைக்குட் சிக்கச் செய்வன்
நம்பிக்கையோடுனைப் பாது காப்பேன்
நம்பிக்கையோடுனைப் பாது காப்பேன்.
ராஜாவே என்னையு மாதரிப்பீர்

39. லோபர்—உலோபி, கஞ்சன்

கட்ட பொம்முதுரை சொல்வது—மேற்படி சந்தம்

பாஞ்சால நாட்டுக்குத் தானுபதிப் பட்டங் கொடுக்கிறேனுந்
தனுக்கு.
கேட்டதோர் சம்பளம் நான்தருவேன் க்யாதியு மெத்த உண்டாகு
மையா.
மாதத்திற் கை நூறு பொன்தருவேன் மன்னவன் பக்கமிருந்
தீரானால்,
திங்களுக் கைநூறு பொன்தருவேன் சீமைக் கணக்கு முடித்தீரானால்.

கட்டபொம்முதுரை ஆயிரம் கம்பளம் நூறு பரிவாரத்துடன் அரசு புரிதல்—மேற்படி சந்தம்

தம்பிதம்பி ஊமைத்துரை சக்கம்மை பாதிவிசேஷ மதால்
பாஞ்சைப் பதியிலே கோட்டையிட்டோம் பார்த்தவர் நெஞ்சந்
திடுக்கிடவே,
ஆயிரம் கம்பளம் நூறு பரிவாரம் அஞ்சாத சேனைகள் சூழ்ந்திடவே,
கட்டியக் காரர் பராக்கெனவே கம்பளத்தார்கள் சபா செனவே,
மார்பிலே சந்தண வாடையிலே மல்லிகை வாடை கமகமென,
கையிலே கங்கணங் கட்டையிலே காதிற்கடுக்கன் பளீரெனவே,
முத்துச் சரப்பளி மாலையிலே மோகன மாலை பளீரெனவே,
வஜ்ரமோதிரக் கற்களிலே மாணிக்கக் கிரீடம் பளீரெனவே,
தங்கத்தில் வார்த்திடுஞ் சிங்கமுகத் தண்டியல் மீது கொலு
விருந்தேன்.[40]

இந்தப் பிரகாரம் கட்டபொம்முதுரை அரசு புரிந்து வரும்போது சவர்மெண்டாருக்கும் நாட்டுக்கு மொப்பாத காரியங்களால் மற்றப் பாளையப்பட்டாரால் சென்னைக்குக் கடிதம் எழுதல் மேற்படி சந்தம்

இங்கிலீஷ் கொடியுள்ள நாளையிலே இப்படியுமொரு செய்தி
யுண்டோ?
பீரங்கிக் குண்டுள்ள நாளையிலே பின்னிட்டு நிற்கவும் ஞாய
முண்டோ

40. இதன்படி பாஞ்சாலங் குறிச்சி முதல் ஜமீன்தார் வீரபாண்டிய கட்ட பொம்மு என்றாகிறது. வரலாற்றுப்படி இது உண்மையல்ல. சிலர் 48 தலைமுறை களாகவும் சிலர் 6 தலைமுறைகளாகவும் கட்டபொம்முவின் முன்னோர்கள் பாஞ் சாலங் குறிச்சியை ஆண்டதாகக் கூறுகிறார்கள். வெள்ளை அதிகாரிகள் குறிப்பி லிருந்து கட்டபொம்முவின் முன்னோர்களின் நான்கு பரம்பரைகளை அறிய முடிகிறது.

துப்பாக்கிக் குண்டுள்ள நாளையிலே துன்பம் பிறக்குமோ
மற்றவர்க்கு ?
பாஞ்சைப் பதியிலே கட்ட பொம்மு பயம் பிறந்தது பூமியிலே.
வாய் பேசாதவனூமத்துரை வல்லபம் பேசிட மார்க்க முண்டோ?
நம்பின எங்களுக்கும்மாலே நன்மை பிறந்திட வேண்டுமையா.
அண்டின பேர்களுக்கும்மாலே அச்சந்தவிர்ந்திட வேண்டுமையா.

அந்தரங்கக் கடிதம் சென்னைக்கு மேன்மேலும் போகிறதால்
அங்குள்ள மேலான துரைமார்களுக்குக் கோபம் பிறந்து
ஜில்லாக் கலெக்டர் சாகீஷன் மேசர் துரைக்கு உத்தரவு கொடுக்க
அதையறிந்த கலெக்டர் கட்டபொம்முதுரைக்கு குற்றால
மீட்டிங்கியென்று கடிதம் எழுதுதல்—மேற்படி சந்தம்

தானுபதி என்ற சண்டாளா, தப்பிதஞ் செய்திடுங் கட்டபொம்மு,
நாட்டுகிடைஞ்சல் இழைத்ததனால் ஞாயங் கிடைத்திட வேண்டு
மென்றார்.
சீமைக் கிடைஞ்சல் இழைத்ததனால் ஜெயங்கிடைத்திட வேண்டு
மென்றார்.
ஞாயங்கிடைத்திட வேண்டுமென்றால் நாமுமவர்க்கருள் செய்ய
வேண்டும்.
ஆகையினாலே காகிதங்களடிக்கடி வரப் பார்த்ததினால்
குற்றாலத்து மீட்டிங்கிக்குக் கொற்றவனே வரவேண்டு மையா.

இந்தக் கடிதம் கண்டவுடன் ஊமைத்துரை பராக்ரம எண்ணத்துடன்
இப்போதே பார்க்கவேண்டு மெனத் தனது படைவீரர்க்கு அறிக்கை
செய்ய அவர்கள் வந்து சேர்தல்—மேற்படி சந்தம்—படைவீரர் பெயர்

முத்துக் கருத்தையாவுஞ் சிவத்தையாவும் முட்காட்டு சூரனுமோடி
வந்தான்
கொட்டமடக்கி, பெரியகோடாலி, குமரய்யா, சின்னக்
கோடாலி, சித்தன்.
சித்துளியுங் கண்ட கோடாலி, நல்ல சேர்வைக்காரர்
சிவத்தையாவும்,
சின்னத்தளவாய், புலிகுத்தி நாயக்கர், சில்லவார் கம்பளஞ்
சேருவையும்,
சின்னணன், வீரணன், பொன்னையாவும் சின்னம நாயக்கன்,
பாதர்வெள்ளை,
காவற்காரன் மகன் கோபக்காரன் கண்ட இடமெல்லாம்
சண்டைக்காரன்,
சாமிநாயக்கன், கெட்டிக்கவுண்டன், சாவற்கட்டிலே
கெட்டிக்காரன்.

அப்பா நாயக்கன், சின்னதுரை, சுப்பையா, முத்தையா, புங்கபிள்ளை,
குப்பணன், வீரப்பன், வெள்ளைச்சாமி, நொண்டிச், சுப்பையா,
சிங்கன், குழந்தைவேலு,
மாதவ நாயக்கன் வீரப்பன் வன்னியன் வாலசுப்ரமணியன்,
கட்டமல்லன்,
பாண்டிய நாயக்கர், வீரலெக்கையர், பட்டியிலே
வளர்மெய்யணனும்,
முத்துவீரணனும், கருப்பையாவும், முள்ளுக்காட்டு
வீரபாண்டியனும்,
வேடிக்கைக்காரன், சிவத்தமுத்து, வாள் வீச்சுக்காரன்,
கருத்தமுத்து,
ஆறுமுகம், சிங்கன், முத்துப்பிள்ளை, அருட்புரத்துரை,
முத்துப்பிள்ளை,
சுப்ரமணியபிள்ளை என்றுரைத்தால் துன்பங்களோடுமே காதவழி.
சங்கரன் குடையன் காலாடி வங்காரு நாயக்கன் பாண்டியனும்
கந்தன் பகடையும், முத்தன் பகடையும், கைகார ராமன்
பகடையுடன்,
பொட்டிப்பகடையும் சட்டிப்பகடையும் போர்வீரன் சக்கையன்
எலக்கையனும்
கட்டையன், மொட்டையன், கொட்டாப் புளியுடன் கம்பள
ராணுவம் பொங்கிடவே.

இவ்விதம் சேனைவீரர்கள் புறப்பட்டுக் குற்ருலஞ் சென்று விசாரிக்க அங்கில்லையென்று திருச்சுளிவரை அலையச்செய்து கடைசியில் ராமநாதபுரம் மீட்டிங்கியென்று சொன்னவுடனே அங்கேயுஞ் செல்வது—மேற்படி சந்தம்-கட்டபொம்முதுரை சொல்வது

ராமநாதபுர மீட்டிங்கியாம் ரயிட்டன் துரையினுத்தரவு[41]
வாய்பேசாத் தம்பி நாமங்குஞ் சென்று வஞ்சகஞ் செய்வதைப்
பார்க்கவேண்டும்.
உத்தரவென்னென்ன தந்தாலும் உட்படுங் காரியந்தான் பெரிது.
ஆயிரங்கம்பளம் நூறுபரிவாரம் யாவருமங்கு புறப்படுவோம்.

ராமநாதபுரம் சென்று விசாரிக்கையில் மீட்டிங்கியென்றுகேட்டு கோணத்தலை வாசலில் மேமெத்தைக்கு வரும்படியாய்ச் சொல்லி சாக்ஷன்மேசர், ரயிட்டன்துரை தனது பட்டாளக்காவலைத் தயார் செய்து சொல்வது - சாக்சன் மேசர் துரையவர்கள் சொல்வது - மேலபடி சந்தம்

வாருங்கோ வாருங்கோ சிப்பாய்காள், கேளுங்கோ கட்டன்
செய் சங்கதியை
ஆங்கிலேய ஆட்சியிலிப்படியும் ஆணவஞ் செய்தானே
கட்டபொம்மு

41 ரயிட்டன் - (Writer) குமாஸ்தா.

பாளையக்கார ரோடிங்கு வந்தான், பந்தயவேடிக்கை காட்டுகிருன்
சேனை தளங்களோ டிங்கு வந்தான், செய்யாதகாரியஞ்
செய்யலுற்ருன்.
சந்திப்பதற்கிங்கே வந்தவன்போல் சண்டை பிடித்திட
வந்தவன்தான்.
உண்டான சட்டத்தை இல்லை யென்ருல் ஒப்பாத சட்டத்தைக்
கொண்டுவந்தான்.
இல்லாத சட்டத்தை உண்டுமென்ருன், ஏற்காத சட்டத்தைக்
கொண்டுவந்தான்.
ராஜாங்க நீதியைத் தப்புகிருன், ஞாயமில்லா வார்த்தை
செப்புகிருன்.
அட்டாளதேசமு மெங்கள் கொடியாடுவதென்பதைப் பாராமல்.

இந்தவிதம் கோபத்துடன் பேசிக் கொண்டிருக்கையில் வரும்படியாய்
உத்தரவைக் கேட்ட கட்டபொம்முதுரை அங்கங்கே கம்பள
வீரர்களைத் தயார் செய்து தானும் தம்பியும் தானுதிபதியும்
உள்ளே போதல்-கட்டபொம்முதுரை சொல்வது-விருத்தம்

குற்ருலம் நெல்வேலி வந்தாற்பேட்டி
கொடுக்கிருே மென்று சொல்லிக் கொடுக்கவில்லை
பற்ருன சங்கரஞர் கோவில்வைத்துப்
பார்க்கிருேமென்று சொல்லிப் பார்க்கவில்லை
சுற்றுக்கரிவலம் வந்தநல்லூர் சோலை
சூழ்ந்த திருச்சுளி கமுதியெல்லாம் சென்று
சொற்படி செய்யாமல் வருத்தமுற்றேன்
துரைகளே இனியேனுந் துணை செய்வீரே

கட்டபொம்முதுரை சொல்வது—தன்னனச்சந்தம்

ராமநாதபுரம் மீட்டங்கியிலே இனியாகிலு மெங்களுக்கே
பேட்டி கொடுத்திட வேண்டுமையா, மீட்டங்கி செய்திட
வேண்டுமையா,
பேட்டி கிடையாமல் வாடலாமா பேசாமல் பேசாமலோடலாமா?
பேசாமல் பேசாமலோடலாமா பேட்டி கொடுத்திட தாமதமே?

மீட்டிங்கு விசாரணை—மேற்படி சந்தம்
சாகீஷன் மேஷர்துரை கேட்பது

ஆத்தூரிலருமங்கலத்தை உனக்கார் கொடுத்தது கட்டபொம்மு

கட்டபொம்முதுரை சொல்வது

எனக்கு நானே கொடுத்ததல்லா லின்னமொருவர்
கொடுப்பதுண்டோ ?

சாகீஷன் மேஷர்துரை கேட்பது

அருங்குளத்திலே கம்பங்கதிரை நூறுகட்டுகளே னெடுத்தாய் ?

கட்டபொம்முதுரை சொல்வது

காடைக்கிரையில்லை நானெடுத்தேன் கன்னக்களவா வழிப்பறியா ?

சாகீஷன் மேஷர்துரை சொல்வது

எப்போது வென்ருன் காட்டு நாய்க்கன் பட்டி எல்லையில் மேய்
மாட்டைப் பத்தலாமா ?

கட்டபொம்முதுரை சொல்வது

காட்டையுழுதிடத் தானே தேனுங் காரணமில்லாமற் பத்து
வேனே ?

சாகீஷன் மேஷர்துரை கேட்பது

எட்டையபுரம் பண்ணை மாட்டை எதற்குப் பத்தனீர், பத்தலாமா ?

கட்டபொம்முதுரை சொல்வது

பிள்ளைப் பாலுக்காகப் பத்தினதல்லாமற் பேதகஞ் செய்வேனே
கட்ட பொம்மு ?

சாகீஷன் மேஷர்துரை கேட்பது

எங்கட்களித்திடுங் கப்பங்களை ஏழுவருட மேனளிக்கவில்லை ?

கட்டபொம்முதுரை சொல்வது

வானம்பொழிய முப்போகம் விளையுது மன்னனென் காணிக்கு ஏது
பணம் ?

கால மழையிலே முப்போகம் விளையுது மொற்றவன் காணிக்கு
ஏது பணம் ?

மாரிகள் பெய்தும் பெய்யாமலும் போவதை மாற்றுதற்கோ
கப்பம் வாங்குகிறீர் ?

கட்டபொம்முதுரை வாக்குமூலத்தினுல் கலெக்டர் துரை
யவர்களுக்குக் கோபம் பிறந்து சொல்வது—மேல்படி சந்தம்

அத்தரிபாணிச்சோ என்ன சொன்ருய் ஆரிடம் பேசுவதிந்தவிதம்?
ரெங்கப்பன் சிப்பாயி கேட்டனேயா நீதியில்லாதவன் வார்த்தை
களை?
கட்டபொம்மு சொன்ன வார்த்தைகளைக் காதாலே கேளுங்கள்
சிப்பாய்களே.
பாஞ்சையிலே நீயாய் வாழ்வதற்குப் பட்டங் கொடுத்தாரோ
ராணியம்மாள்?
கம்பள ராணுவ மேட்டிமையா காணுமற் செய்கிற சேட்டைகளா?
கோட்டைக் கதவைச் சாத்துங்கடா கூசாமற் சண்டைகள்
போடுங்கடா.

கட்டபொம்முதுரை சொல்வது
மேற்படி சந்தம்

சந்திப்புச் செய்திட வந்ததற்குத் தக்க மரியாதை செய்தீரையா.
மீட்டிங்கு பார்த்திட வந்ததற்கு வேண்டு மரியாதை
செய்தீரையா.

ஊமைத்துரை பராக்கிரமம்
மேற்படி சந்தம்

அண்ணுவே, அண்ணுவே, கேளுமையா, அன்புள்ள தம்பிநான்
சொல்லுகிறேன்.
சாகீஷன் மேஷர் செய்கையினுற் சண்டைக் குறிகளுந் தோன்று
தையா
சண்டைக் குறிகளும் தோன்றுவதாலிந்த இடந்தனில் நிற்க
வொண்ணு.
இந்த இடந்தனில் நிற்பதனுல் என்னென்ன மோசங்கள்
வந்திடுமோ?

தம்பி வார்த்தையைக் கேட்டவுடனே தாஞபதியை மறந்து
மேல் மெத்தையிலிருந்து கீழே இறங்கும்போது துரையவர்கள்
போகாதே என்று தடுத்தல்—மேற்படி சந்தம்

போகாதே போகாதே கட்டபொம்மு பொல்லாங்கு செய்யாதே
சொல்வதைக் கேள்,
ஏகாதே ஏகாதே கட்டபொம்மு எங்கே நீ போகிருய் கட்ட
பொம்மு?
ஓடாதே ஓடாதே கட்டபொம்மு ஓடினுலுன் மடியைப் பிடிப்பேன்.

கிஸ்தி கொடுக்காத உன் கையிலே கிட்டிகள் போடுவேன்
சட்டப்படி
சொல்லை மறுத்துநீ போனையானால் துப்பாக்கிக் குண்டாலே
சுட்டிடுவேன்.
சீமைக்கதிகாரர் வெள்ளைக்காரர் தேசமெங்கும் கொடி
நாட்டையிலே,
சட்டவிரோதங்கள் செய்தபின்னால் தப்பவோ பார்த்தினை
யிப்பொழுது ?
கேட்டதற்குப் பதில் சொல்லாத கெர்வத்தில் பேசாமற்
போகலாமா ?

கட்டபொம்முதுரை சொல்வது
மேல்படி சந்தம்

காசி தொடுத்துக் கன்யா குமரிவரை கட்டபொம்மு முந்தி
தொட்டதில்லை
என்மடியைத் தொட ஞாய முண்டோ இனிமேல் தொட்டிடில்
கோபம்வரும்.

ஊமைத்துரை சொல்வது
மேற்படி சந்தம்

கோபம் பிறக்குது கண்களிலே கொற்றவன் முந்தியைத் தொட்ட
தனால்.
மீசை துடிக்குது பார்க்கையிலே விட்டுவிடு முந்தி தொட்ட கையை

பாதர் வெள்ளை பராக்கிரமம்
மேற்படி சந்தம்

பேசாமற் போவேனோ பாதர்வெள்ளை பின்வாங்கி நிற்பேனோ
சண்டையிலே.
அல்லக்காப் புல்லக்காப் பாய்ந்தேனென் றுலாயிரம் வந்தாலுங்
கண்டிடுமோ?
கம்படிகுஸ்திகள் செய்தேனென்றால் கண்டவர் சண்டைகள்
போடுவரோ ?
கொண்டையன் கோட்டை மறத்தி பெற்ற கொடிமுடி வெள்ளை
நானலல்லவோ?

கட்டபொம்முதுரை சொல்வது—சக்கதேவி வணக்கம்
மேல்படி சந்தம்

என்னையாண்டவளே சக்கதேவி எங்களை முக்காலுங் காருமம்மா
ஒன்பதுகம்பள வாக்கினிலே உறுதி தந்திட வேண்டுமம்மா,

என்னம்மா என்னம்மா சக்கம்மாளே என்னகுறைவுகள் செய்
தோமம்மா?
ஒருகுறைவுமே செய்யவில்லை உண்மையுடன் காக்க வேண்டுமம்மா.
காட்டிக் கொடுக்காதே சக்கதேவி, கண்பார்க்க வேண்டுமே
இப்பொழுது
போக வழியில்லை கோட்டையிலே, பொல்லாத வஞ்சனை
செய்ததனால்
போக வழிதர வேண்டுமம்மா, பொல்லாத வஞ்சகம் நீங்கிடவே.

சக்கம்மாள் தயவினால் மனம் குதூகலிக்க உடனே கோட்டையை நீங்கி கம்பள வீரருடன் புறப்பட்டு கன்னிமார் கோவிலண்டை வரும்போது தானாபதியைக் காணாமல் வருந்துதல்—மேற்படி சந்தம் கட்டபொம்முதுரை சொல்வது

ஈதென்ன அநியாயம் தானாபதி எங்கே சென்றாரோ பிள்ளை மகன்?
தானாபதி நமக்கில்லா விட்டால் சங்கதியொன்றும் முடியாது.
பிள்ளைமகன் நமக்கில்லா விட்டால் பின்வருங் காரியஞ் சொல்
பவராார்?
நாட்டுக் கணக்கு முடிப்பவர்யார், நமக்குத்தந்திரம் சொல்
பவர்யார்?
வருமுன்னறிவான் வெள்ளாளன், வந்தபின்னறிவான்கம்பளத்தான்.

புலிகுத்தி நாயக்கர் முத்துக்குறியுரைப்பது

முத்துக் குறியினால் தோன்றுதையா முன்னின்று கேளுங்கள்
சங்கதியை.
சிப்பாய் கைகளிற் சிக்கிக்கொண்டான் சென்னபட்டணம் போய்ச்
சேர்ந்தான்.
வைது அடிப்பதை யல்லாமல் மன்னனுடம்புக்குச் சேதமில்லை.
திட்டி அடிப்பதையல்லாமல் சென்ற உடம்புக்குச் சேதமில்லை.
பத்து தினங்கள் கழித்ததானால் பக்கத்தில் பார்க்கலாம்
பிள்ளைதன்னை.
எட்டுதினங்கள் கழித்ததானால் இங்கே பார்க்கலாம் பிள்ளைதன்னை.

முத்துக்குறி பார்த்து வரும்போது பல காரியங்களைச் செய்து பாஞ்சை வந்த உடனே வெள்ளையைக் கல்யாணஞ் செய்ய வேண்டுதல்—மேல்படி சந்தம்

கட்டபொம்முதுரை சொல்வது

பாதர் வெள்ளையென்று பட்டங் கொண்ட பாலகனே சொல்லக்
கேளுமையா
மாலையின் கோலத்தைப் பார்க்க வேண்டும் மட்டிலாக்கியாதிய

டைய வேண்டும்.
கல்யாண கோலத்தைப் பார்க்கவேண்டும் கன்னிச் சடங்குகள்
செய்ய வேண்டும்.
கண்ணுள்ள போதே கண்காட்சி கண்தப்பிப் போன பின்னொன்று
மில்லை.

வெள்ளையன் சொல்வது—மேற்படி சந்தம்

நீரில்லாப் பள்ளத்தில் கைகொடுத்து நிலைக்கும் பட்ட முந்தான்
கொடுத்தீர்.
உன்னுரையுந்தட்டவும் நீதியுண்டோ உத்தமனே எங்கள் ராஜாவே
செல்லக்கல்யாணம் செய்ய வென்றால் நம்பு மெனக்கது
சம்மதந்தான்

வெள்ளையனுக்குக் கல்யாணம் செய்தவுடன் கொடுக்கவேண்டிய
விமரிசை யெல்லாஞ் செய்து வல்ல நாட்டுக்குச் சென்றவுடன்.
தானுபதி கதை ஆரம்பம்—என்னை யாண்டவளே என்று பாடவும்.
சென்னையில் துரைமார்கள் தானுபதியைக் கோபித்தல்—விருத்தம்

பேயினைத் தெய்வமாகப் பெற்றவன் கட்டபொம்மு
ஞாயமில்லாத செய்கை நாட்டினிலிழைத்ததாலே
நீயுமன்னவனோடுற்று நியாயமில்லாத சம்பிர
தாயங்கள் செய்தாலே தண்டனைக் காளாவாயே

தன்னனச் சந்தம்

தானுபதியென்ற வார்த்தையிலே சண்டைபிறக்குதே பூமியிலே.
இந்த அதிகாரஞ் செய்தீரானுலெங்கள் கொடிக்கு முனேற்குமோ
சொல்.
பாஞ்சைப்பதி மன்னன் கட்டபொம்மைப் பார்த்திடற்கிங்கே வர
வழைத்தால்
உனக்குத்துரோகங்கள் செய்யவில்லை உண்மையாய்ச் சொல்கிறேந்
தானுபதி

தானுபதி சொல்வது—மேற்படி சந்தம்

கர்னல் துரைகளே கேளுமையா கட்டபொம்முதுரை சங்கதியை
மந்திரி சொன்னாலுங் கேட்கமாட்டார் மற்றவர் சொன்னாலுங்
கேட்கமாட்டார்.
செய்யாத காரியஞ் செய்யமாட்டார், செய்தாலும் பின்வாங்கி
ஓட மாட்டார்

தன் புத்தியல்லது வேறுபுத்தி சாற்றினாலு மதைக்கேட்கமாட்டார்.
வேஷங்கள் போட்டவர்க்கே காசுவேலைகள் செய்திடிற் கூலியுண்டு.
வேஷம் போடவிடிற் காசுமில்லை வேலைசெய்யாவிடிற்
கூலியுண்டோ ?
போகவிடை தரவேண்டுமையா பொல்லாத கஷ்டங்கள் செய்ய
வேண்டாம்.

தாஞபதி ரெம்பவேண்ட சென்னைத் துரைமார்களுக்கு இரக்க
முண்டாகித் தாஞபதியைப் போவென உத்தரவு கொடுக்கப் பாஞ்சை
நகர் வந்தவுடன் பாதர் வெள்ளைக்குக் கல்யாணம்
செய்ததை நினைத்து சிறிது வருத்தமுண்டாகிச் சொல்வது

சாமிகளே ஐயா கட்டபொம்மு தாஞபதி கோடி தெண்ட
மிட்டேன்.

கட்டபொம்முதுரை சொல்வது

வாருங்கோ வாருங்கோ தாஞபதி வந்நீரா வந்ததே நல்லவேளை.

தாஞபதி சொல்வது

நாமநாதபுரம் கோட்டையிலே நீர் மறந்தோ பயந்தோடி வந்நீர் ?

கட்டபொம்முதுரை சொல்வது

நாங்கள் மறக்கவும் ஞாய முண்டோ ஞாபக மில்லாம லோடி
வந்தோம்.

தாஞபதி சொல்வது

ஞாபக மில்லாம லோடிவந்தால் நாங் படுங் கஷ்டத்திற்
கென்னவழி ?

கட்டபொம்முதுரை கேட்பது

என்னென்ன சங்கடஞ் செய்தனரோ எங்கட்குரைத் திட
வேண்டுமையா

தாஞபதி சொல்வது

பெற்றவள் பிள்ளையை வைதாலும் ப்ரீதியில்லாமலே தள்ளுவரோ ?

கட்டபொம்முதுரை சொல்வது

அப்பனே வந்ததே போதுமையா இப்படி வாருங்கோ தாஞபதி.

தானுபதி சொல்வது

நான் பெற்ற பிள்ளைக்குக் கல்யாணம் நடத்துதற்கு நெல்
வேண்டுமையா.
அருமைப் பிள்ளைக்குக் கல்யாண மன்புடன் செய்திட
வேண்டுமையா.

கட்டபொம்மு துரை சொல்வது

உமக்குப் பிள்ளை யென்றுற்ற தனுலெமக்கும் பிள்ளைதான்
தானுபதி
அருமைப் பிள்ளைக்குத் தாலிகட்ட ஐநூறு கோட்டை நெல்
போதாதா?

தானுபதி சொல்வது

ஐநூறுகோட்டை நெல்தந்தாலும் பழப்பந்திக்குக் காணுது
முந்நூறு கோட்டை நெல்தந்தாலு முறுக்குப் பந்திக்குக் காணுது.
தொண்ணூறு கோட்டை நெல்தந்தாலும் தோசைப் பந்திக்குக்
காணுது.

கட்டபொம்முதுரை சொல்வது—மேல்படி சந்தம்

சின்னக்குளம் விளைந்ததானுல் சீரகச் சம்பா நெல்தாரேன்
பெரியகுளம் விளைந்ததானுல் பேர்ப்போன சம்பா நெல்தாரேன்
ஆரக்குளம் விளைந்ததானுல் ஆனைக்கொம்பன் சம்பா நெல்
தாரேன்
சாலிகுளம் விளைந்ததானுல் தடையில்லாமலே நெல்தாரேன்

கட்டபொம்முதுரை இப்படிச் சொல்ல மனப் பொருமையினுல் ஊமைத்துரையிடஞ் சொல்ல அவர் மற்றக் கம்பள வீரர்க்கு அறிக்கை செய்து கம்பெனியார்க்கு இடைஞ்சல் செய்து பாண்டியத் தேவனைக் கொலைசெய்ததை அறிந்த கருப்பாயி டாளையங்கோட்டை சின்ன மெக்காலே, பெரியமெக்காலே துரைக்குச் சொல்லி முறையீடல்—மேற்படி சந்தம்

தர்மத்துரைகளே கேளுமையா தஞ்ச முண்டோ வேறே எங்களுக்கு
எட்டுத்திசையும் பதினுறு கோணமு மெங்கு செயம் பெற்ற
கட்டபொய்மு
கட்டபொம்மு தம்பி ஊமைத்துரை கணக்குப் பிள்ளையாந்தானுபதி

தானுபதிப்பிள்ளை செய்தகதை சாற்றிடற் கொண்ணுமோ
பூமியிலே
பாண்டியத்தேவனைக் காணவில்லை, ஆண்டவனே நாங்களென்ன
செய்வோம் ?

துரைமார்களுரைப்பது—மேற்படி சந்தம்

கட்டபொம்மு செய்தகுட்சியிலே கஷ்டமடைந்திட
வேண்டாம் நீ.
ஊமைத்துரை செய்த குட்சியிலே யோசனைசெய்திட
வேண்டாம் நீ.
தானுபதி செய்தகுட்சியிலே தஞ்சம் புகுந்தனையஞ்ச
வேண்டாம்.

தைரியஞ் சொல்லி உடனே இரண்டு துரைமார்களும் சென்னைக்குக் கடிதம் எழுதல்—அகவல்

திருவுரை நகராம் சென்ன பட்டணமாம்
பெருமை களகலாப் பெற்றியா லோங்கும்.
அரசுகள் புரிந்தோம் அறிவுளோரென
வருகிற நம்மால வையக மீதே
இதுவரை குற்ற மேற் படவில்லை.
விதிவலிதானோ வெற்றிகள் பெறவோ,
பாஞ்சைப் பதியைப் பரிபாலனஞ் செய்.
தேன்சொரி வாயன் தெய்வசம் மதமாய்
வாஞ்சையில்லாத மன்னவன் கட்ட
பொம்மெனத் தோன்றும் புத்தியில்லாதான்,
நன்மை செய்யாமற் றின்மையே புரிவோன்,
சொல்வது போலத் துணிவுறமுடிப்போன்,
பின்னுளோர் செயலைப் பேசிடற்கொண்ணு,
ஆகையாலிகித மறிந்தவுடனே
இங்கிலீஷ்த் துருப்போடிங் கெழுந் தருள்வீர்.
பாளையங்கோட்டை பண்பாய் வாழ்வோன்
சின்னமெக்காலே [42] சிப்பாய்க் கெஜமான்
இந்தப் படிக்கு எழுதினேன் கடிதம்.
அந்தரங்கத்தினதி செயமெல்லாம்
சிந்தையினாலே தெரிவீர் துரைகாள்.

சென்னை' துரைத் தனத்தார் கடிதங் கண்டவுடன் பிர்க்கெட்டு[43] மேஷருடன் காலன்[44] துரையவர்களும் பட்டாளங்களுடன்

42. சின்னமெக்காலே—Macaulay Jr.
இவன் பாளையங்கோட்டையின் ராணுவ அதிகாரி
43. பிர்க்கெட்டு—Pirkette. 44. காலன்—Collens

புறப்பட்டு ஓட்டப்பிடாரத்தில் இறங்கி விசாரிக்கையில், ஊமைத்துரையுடன் தானாதிபதி திருச்செந்தூர் போனதைக்கண்டு சின்னமெக்காலே, பெரியமெக்காலே சாம்பிராணி ஓடையில் வளைத்தல். அது கண்டு கட்டபொம்முதுரை நகரா[45] வடிக்க ஊமைத்துரை சொல்வது—மேற்படி சந்தம்

அய்யாவே தானாபதி அஞ்சாத டம்மாளங் கொட்டுதையா
அஞ்சாத டம்மாளம் கொட்டுதையா அண்ண ரழைக்கிறார்
போகவேணும்.

திருச்செந்தூரை நீங்கி வரும்போது சாம்பிராணி ஓடையில் சின்ன மெக்காலே பெரிய மெக்காலே துரையவர்கள் பட்டாளங்களுடன் எதிர்க்க அதனின்று தப்பி பாஞ்சை வந்து சேர்ந்தனர். காலன் துரையும் பிர்க்கெட்டு மேஜரும் கோட்டையை முற்றுகை போடுவதை அறிந்து வல்ல நாட்டிற்குப் பாதர் வெள்ளையனை அனுப்பிவிட்டு கட்டபொம் முதுரை சொல்வது—முதற் சண்டை.

இன்பமடைந்திட வேண்டு மென்றாலிருக்க வொண்ணாது
கோடைக்குள்ளே
துன்ப மடைந்திடவேண்டு மென்றால் துணிந்து வாழுவோங்
கோட்டைக்குள்ளே.
குண்டுக்குத்தப்பிட வேண்டு மென்றால் கூடவெண்ணாது
கோட்டைக்குள்ளே.
உயிர்பிழைத்திட வேண்டுமென்றால் ஒளியவொண்ணாது
கோட்டைக்குள்ளே.
காகம் பறக்காத பாஞ்சையிலே கருப்புச் சட்டைகள்
நிற்பதைப்பார்.
சிட்டுப் பறக்காத பாஞ்சையிலே சிவப்புச் சட்டைகள்
நிற்பதைப்பார்.
இப்படிச் சட்டைகள் கூடிக்கொண்டால் எப்படி நாட்டினில்
வாழ்கிறது?

பாஞ்சையிலே கட்டபொம்முதுரை வீரர்களுடன் தயாராய் வல்லநாடு சென்ற சுந்தரலிங்கம் வெள்ளையனுக்கு அறிக்கையிடல்—வெள்ளையன் நித்திரை—வல்லநாடு—சுந்தரலிங்கம் சொல்வது.

கொன்னடையன் கோட்டை மறத்திபெற்ற கொடுமுடியே
ஓ வெள்ளையய்யா.
கொடுமுடியே ஓ வெள்ளையய்யா கோபமில்லா
மலெழுந்திருப்பீர்.

45. நகரா—பெரிய முரசு.

வெள்ளையன் சொல்வது

ஆரடா ஆரடா வெள்ளைமுன்னே அஞ்சாமல் நிற்பவன்
மாதரிச்சோ,
நான்குலை வாழையை வெட்டுமுன்னே நீ எதிர்நில்லாம
லோடிப்போடா.

சுந்தரலிங்கம் சொல்வது

வாழைக்குலைகளை வெட்டவேண்டாம் வம்பான வார்த்தைகள்
பேச வேண்டாம்.

வெள்ளையன் சொல்வது

என்னெதிர் பேசிட நீதியுண்டோ உன்னுயிர் போவதறியாமல்

சுந்தரலிங்கம் சொல்வது

கட்டக் கருப்பணை சுந்தரலிங்கம் காளையென்றின்ன
முந்தோன்றலையே.
வல்லபம் பேசிட மார்க்க முண்டோ மன்னன் ழைத்திடும்
நாளையிலே.
உருண்டைச்சோறு கொடுத் தனுலுன்னை யழைக்கிறார்
கட்டபொம்மு.
திரளைச்சோறு கொடுத்ததினுல் தேடியழைக்கிறார்
கட்டபொம்மு

வெள்ளையன் நித்திரை மயக்கந்தீர்ந்து ஆதரவாகக் கேட்டல்
விருத்தம்

அப்பனே சுந்தரலிங்கம் அருகினில் வாடாபிள்ளாய்
செப்பிய வார்த்தை யெல்லாம் செவியினில் நுழைந்ததையா
எப்படிவிளையுமோ நாமென் செய்வோம் சக்கதேவிக்
கொப்பிய கருணையில்லா துண்மையிலுறங்கினேனே

தன்னனச் சந்தப்பாட்டு

காலகெதி என்ன நேர்ந்ததடா கட்டபொம் முதுரை
நாளையிலே.
ஊள்வினையே வந்து மூண்டதோடா ஊமைத்துரையுள்ள
நாளையிலே.

சுந்தரலிங்கம் சொல்வது—மேற்படி சந்தம்

காலன் துரையொரு பட்டாளம் மேலும் மேலும் வந்து
கூடினரே

வெள்ளையன் சொலவது—மேற்படி சந்தம்

காலன்துரை எம காலனடா கஷ்டங்களென்ன
விளைந்திடுமோ

பெண்சாதியிடம் விடை கேட்டல்
விருத்தம்

பாஞ்சையிற் கோட்டையிட்டுப் பாரினி லெவரும் போற
வாஞ்சையிலரசு செய்யும் மன்னவன் கட்டபொம்மு
பூஞ்செறி கமல பாதம் போற்றவே போக வேண்டும்
தேன்சொரி பவளவாயாற் ஜெயமென விடை யீவாயே.

தன்னனச் சந்தப் பாட்டு

மாதரசே சொல்லக்கேளடி நீ மன்னவன் கட்டபொம்
மேந்த்ர துரை,
பெற்ற குழந்தைக்கு மேலானவற்ற குழந்தைபோல்காப்
பவன்டி,
பூமியிலென்னை நடக்கக்கண்டால் பொற்சதங்கைப்பாதம்
நோகுமென்று.
தண்டியல்மேல்வர வேண்டு மென்று சண்டை பிடிக்கிற
சிங்கமடி.
சிங்கமழைத்திடும் நாளையிலே செல்வதற்குத் தடை செய்ய
வேண்டாம்
போக விடைதர வேண்டுமடி போகத்தடை செய்தால்
கோபம் வரும்.

பெண்சாதி சொல்வது—விருத்தம்

நல்லவருலவு மிந்த நாட்டினிற் கற்பினாலே
சொல்வதற் கருமையான சுந்தர வுன்னைக்கூடி
எல்லையில் வல்ல நாட்டிற் கிறையவனென்ன வாழ்ந்தீர்
தொல்லையில் வருந்துதற்கே தோற்றின கனவைக்கேண்மோ.

தன்னனச் சந்தப்பாட்டு

போகாதே போகாதே என் கணவா பொல்லாத சொப்பனம்
நானும் கண்டேன்.

வெள்ளையன் சொல்வது—மேற்படி சந்தம்

கண்டகனவினைச் சொல்லாவிட்டாற் கத்தியால் வெட்டு
வேனிச் சணமே

பெண்சாதி சொல்வது — மேற்படி சந்தம்

சொல்லப்பகறுதே நெஞ்சமய்யோ தொரந்தரை என்ன
னென்ன வந்திடுமோ ?

வெள்ளையன் சொல்வது

தொந்தரை என்னென்ன வந்தாலுஞ் சிந்தை கலங்காமல்
சொல்லுசும்மா.

பெண்சாதி சொல்வது — மேற்படி சந்தம்

குளிக்க மஞ்சளரைக்கியிலே வழிக்கையில் கரியாச்சுதையா
பாஞ்சை நகரழியக் கண்டேன் பாழூராகவே போகக்
கண்டேன்.

பட்டத்து யானைகள் விறிடவே பந்தயக் குதிரை சாகக்
கண்டேன்.

பூனைகுறுக்கிட வாற் குருவி போகுதுபார் வலப்பக்கத்திலே
காகமிடமாகு தென்ன செய்வேன், கன்னி நான் சொல்வதைக்
கேளுமையா

கூகைநின்று குழறக்கண்டேன் கோபுரத்திலாந்தை யலறக்
கண்டேன்.

மேகமில்லாம விடிக்சக்கண்டேன் வீரனே உன்தலை
போகக்கண்டேன்.

கோட்டையில் பீரங்கி பாயக்கண்டேன் குண்டினில் யாவரும்
சாகக்கண்டேன்.

வாழைத் தோட்ட மழியக் கண்டேன் மாமரத் தோப்பு
மழியக் கண்டேன்.

இஞ்சிக்கிணறு இடியக்கண்டேன் எலுமிச்சந்தோட்ட
மழியக் கண்டேன்.

மஞ்சள்கிணறு இடியக்கண்டேன் மல்லிகைத்தோட்ட
மழியக் கண்டேன்.

இவ்விதஞ் செப்பனங் கண்டதனுல் எவ்விதம் போவது
பாஞ்சைநகர். 46

வெள்ளையன் சொல்வது—விருத்தம்

தமையனுந் தம்பியோடு தாமரைக் குளத்திற் கண்டார்
சமமென உரைப்பேனுந்தன் தன்மை யிலெதிரே வந்தால்
விமரிசைபெறவே பாதர்வெள்ளையென் றழைத்தார் கையால்
அமைவுறு சாதந்தந்தா ரன்னவ ரழைத்த வேளை

தன்னனச் சந்தம்

போக விடை தரவேண்டுமடி. போகத்தடை செய்தால்
கோபம் வரும்.
என்புத்தி கேட்பவர் கோடியதில் பெண்புத்தி கேட்பேனே
பாதர் வெள்ளை
உண்ட வீட்டிற்கு ரண்டகஞ் செய்துலகிலே உயிர்
வாழலாமா? 47
ஆறிலுஞ்சாவு பின்நூறிலுஞ்சாவென ஆன்றோர் 48
பழமொழி கேட்டிலையோ?
மாறிப் பேசாதே நீ பேசினுலுனை வாளுக்கிரையாக
வைத்திடுவேன்

வெள்ளையனிந்த விதமாக மனைவியைக் கோபித்து சுந்தர
லிங்கத்தை குதிரைகளுக்குச் சீனிவையெனச் சொல்வது
மேற்படி சந்தம்

பிள்ளையைப் போல் வந்த சுந்தரலிங்கப் பேய்க்குதிரையைச்
சீனி வைப்பாய் 49
முத்துவர்ணத்திலே சீனி வைத்தால் மூடி விழிக்குமுன்
போகுதடா.

போகும்போது இடைவழியில் பேசிக் கொள்வது

என்னவிளையுமோ சுந்தரலிங்கம் என் மனம் நோகுதே என்ன
செய்வேன்
சண்டைக்கு வந்தவன் காலன்துரை, சாகத்துணிந்தவன்
பாதர்வெள்ளை.

46. கனவில் வந்த அபசகுனங்கள், இவை நாட்டு நம்பிக்கைகளை யுணர்த்தும்.

47, 48. பழமொழிகள்.

49. சீனி—சேணம்

வானத்தைச் சுற்றுதே கண்கள் ரெண்டும் வாரியடிக்குதே
பேய்க்குதிரை.
பூமியைச் சுற்றுதே கண்கள் ரெண்டும் போகுது பாடரா
முத்துவர்ணம்.

இருபேரும் பாஞ்சைப்பதி சென்று கட்டபொம்மு துரையை
வணங்கல் — மேற்படி சந்தம்

பாஞ்சையிலே இது நாள் வரைக்கும் பங்க மடைந்திடக்
கண்டதில்லே.
சாலிகுளத்துக்குப் பக்கத்திலே சண்டைக் கொடியினை
நாட்டலுற்றார்
சண்டைக் கொடியினை நாட்டயிலே சங்கதி பேசவும்
ஞாயமுண்டோ?
வெள்ளம் வருமுன்னே போட்ட அணை வெற்றியடைந்திடுங்
குற்றமில்லை.
வெள்ளங்கள் வந்தபின் போட்ட அணை வெற்றணையாக
முடியுமையா.
நாமினி யோசனை செய்வதனால் ஞாயங்கிடைக்குமோ
பூமியிலே ?
ஆனாலுமாகுது போனாலும் போகுது ஆண்டவனே
விடைதாருமையா.

கட்டபொம்முதுரை சண்டை செய்யும் வகை கூறல்—விருத்தம்

மல்லிகை முல்லைப் புஷ்ப மணஞ்செறி கொண்டையிட்டு
கல்லினிற் ஜொலிக்கு முத்துக் கடுக்கனு மிலங்கக் கையில்
வல்லயம் பிடித்து நின்ற மைந்தனே உலகமீதே
வெல்வதும் தோற்பதெல்லாம் விதிவச மாகையாலே

தன்னனச் சந்தம்

யுத்தமுனையிலே நிற்கையிலே யோசனையில்லாமல்
நிற்கவேண்டும்.
சண்டை முனையிலே நிற்கையிலே தந்திரமாகவே
நிற்கவேண்டும்.
தந்திரமு மந்திரமும் வேண்டுமடா சமர்த்துப் பேசிடலாகாது
கம்பளவீரர்கள் மத்தியிலே கண்ணனையொப்பானே போய்
வருவாய்.

யுத்த ஆரம்பம் - என்னையாண்டவளே என்று பாடிக் கொண்டே லாகை பாய்வது—அப்போது காலன் துரை சொல்வது

விருத்தம்

வெள்ளைய னென்றுரைக்கும் வீரனும் நீ தானெடா
பிள்ளையெ யன்றுன்னைப் பேணிப் பிரியமாய் வளர்த்தாரோ
சொல்.

கள்ளமும் கவடு சூதும் கருணையில்லாமல் நாட்டை
கொள்ளைகளடிப்பதற்குக் கும்புகள்[50] கூடினரே

தன்னனச் சந்தம்

நில்லடா நில்லடா பாதர்வெள்ளை, நேர்நின்று சண்டைகள்
செய்ய வேண்டும்.
வானைத் துளைத்திடுங் குண்டு முன்னே வந்தவர் மீளவு மார்க்க
மூண்டோ ?
மேருவைத் [51]துளைத்திடுங் குண்டு முன்னே வெற்றி
யடைந்திடக் காரணமோ ?
டப்பென்று குண்டுகள் போடையிலே குப்பென் றெழும்புதே
தீப்பொறிகள்.
காலன் வலையில் சிக்கச்செய்வேன் காருண்ய மில்லாத உன்
உயிரை.
ஏமன் வலையில் சிக்கச்செய்வேன் எங்கே போனாலும் உன்னை
விடேன்.

வெள்ளையன் விருத்தம்

நிற்பவர் சுத்த வீரர் நியாய மில்லாமல் நானே
தப்புகள் செய்யமாட்டேன் சண்டைகள் புரியும்போது
மற்புரிச மயமுன்னே வைத்த கால் பின் வைக்கேன்
இப்பொழு தென்ன கார்ய மியற்றினு மியற்று வாயே

தன்னனச் சந்தம்

சிட்டுப் பறக்காத பாஞ்சையிலே சிட்டுப் பறக்கவும் கால
மூண்டோ ?
காகம் பறக்காத பாஞ்சையிலே காகம் பறக்கவும்
நீதியுண்டோ ?

50. கும்புகள்—கூட்டம்
51. மேரு மலை (புராண மலை)

வெள்ளையனென்று விளம்பயிலே மேதினியெங்கும் நடுங்கிடுமே.
கட்டபொம் மென்று விளம்பயிலே கண்டவர் நெஞ்சந் திடுக்கிடுமே.
ஊமைத்துரை என்று பேசையிலே ஊக்கம் பிறக்குமே மற்றவர்க்கு.
ஆனாலு மாகுது போனாலும் போகுது அஞ்சாமற் சண்டைகள் செய்திடுவோம்.

காலன் துரையவர்களும் கண்டாங்கி மேஜரும் யுத்த ஆரம்பத்தில் சொல்வது—விருத்தம்

மாயமும் மருந்துங் கூட்டி மனிதராலிறந்து ளோரைத்
தாயென எண்ணி எண்ணிச் சக்கென நாமமிட்டு
பேயெனுந் தெய்வந்தன்னைப் பேணியே கூவிக்கூவி
ஞாயமில்லாது செய்தால் நம்புமோ உண்மைத் தெய்வம்.

தன்னனச் சந்தம்

நில்லடா நில்லடா பாதர்வெள்ளை, நியாயந் தெரியாத சண்டாளா.
குண்டுக்கு நேர் நிற்க மாட்டாமல் கூசாமலோடுவது ன்னுயிர். பார்.
பீரங்கி நேர் நிற்க மாட்டாமல் பேசா மலோவடுது ன்னுயிர் பார்.
துப்பாக்கி நேர் நிற்கமாட்டாமல் சொல்லாமலோடுவது ன்னுயிர் பார்
மேகம்போலே புகை சூழையிலே வீரர்கள் நிற்கவும் ஞாயமுண்டோ?
கும்பினி வெற்றியடைந்ததனால் கோட்டைக்குளே சென்று பாருங்கடா.

வெள்ளையனால் வீரம் விளங்க வேண்டிய முயற்சி செய்வதுங்கூட ராமபாணத்தை யொத்த குண்டுக்கு நேர் நிற்க மாட்டாமல் காலன்துரை காலங்கண்டு கண்டாங்கி மேஜர் குண்டால் கீழே வீழ்ந்தான். அப்போது என்னை யாண்டவளே என்று பாடி உயிர் போதல்—மனைவி புலம்பல்—தெம்பாங்குத் தமுக்குப்பாட்டில்—ஒப்பாரி

முல்லை மலரே முருக்கம்பூ வாயழகா
மல்லிகை ரோஜாவே வாடாமருக் கொழுந்தே
கோணக் கொடி மரமே குன்றாத வாசகமே

வாடாத செண்பகமே மங்கை உன்னைப் பார்ப்பதெப்போ ?
அடடாசண்டாளா[52]

தூண்டாமணி விளக்கே சூதாடும் பம்பரமே
மாண்டாயோ நீமணந்த மங்கையுனைப் பார்ப்பதெப்போ?
கொண்டையன் கோட்டையிலே கோலாகலக் கொழுந்தே
அண்டருல[53] கடைந்தாலடி யானைச் சேர்வதெப்போ
அடடா சண்டாளா

மாணிக்க முத்து வயிரம் விலைபோகையிலே
ஆணிப் பொனென்ற தாரணியப்புகுந்தாயோ ?
இத்தரையிலஞ் சாதிருந்த ஜெயக் கொடியை
அத்தரையிலுள் ளோர்க்கு அறிவிக்கச் சென்றனையோ
அடடா சண்டாளா

சிங்கத்தின் கர்ஜனையால் திரண்ட கருமேகம்
பங்கப் படுத்துமென்று பாராதிருந்தேனே.
மல்லாளி[54]யென்று மகுடத்தைச் சூட்டையிலே
வில்லாளி நாட்டில்[55] விருது பெறச் சென்றாயோ ?
அடடா சண்டாளா

கோடை மழையிலே கூடு விட்ட குருவி போலே
கால மழையிலே கன்றிழந்த மானைப் போலே
கூவுகிறே நானடியாள் கொங்கையிலே கையறைந்து
வாடுகிறேன் நானடியாள் மன்னா உன் மேல் விழுந்து
தேடுகிறேன் நானடியாள் திருமுகத்தைப் பாராமல்
சூடுகிறேன் நானடியாள் கோலவிழி கூத்தாட
ஓடுகிறேன் நானடியாள் உன்னுசை யில்லாமல்
ஆடுகிறேன் நானடியாள் ஆதரிப் பாரில்லாமல்
மீசை முறுக்கழகா வில்லேந்தும் கையழகா
வில்லேந்துங் கைகளிலே வேந்தனிட்ட கங்கணமும்
வேந்தனிட்ட கங்கணத்தில் வீராதிவீரனென்று
பாந்த மிட்ட உங்களையே பாதர்வெள்ளை யென்றழைக்கும்
போதெரித்துப் பேசையிலே பொன்னாலே தேன் சொரியும்
தேசிகமே[56] தெள்ளமுதே சிங்காரச் சோலையிலே
மாசில்லாத கொக்கோக மல்லாடும் மன்மதனே
போதாதார் சீமையிலே போகவழி தேடுகிறேன்.
ஆகாதார் சீமையிலே ஆனவழி தேடுகிறேன்.

---

52. வெள்ளையன் மீது ஒப்பாரி சொல்லி வெள்ளையம்மாள் பாடுவது.
53. வீரர் உலகம் (வீரசுவர்க்கம்)
54. மல்லாளி—யுத்த வீரன்
55. வில்லாளி நாடு—வில்வீரர் இறந்தபின் செல்லும் நாடு
56. தேசிகம்—அறிவாளி

போகவழி தேடையிலே போகாதே என்பவர் யார்?
ஆனவழி தேடையிலே ஆகாது என்பவர் யார்?
போக வழி தேடினலும் பொல்லாப்புத் தீராதே
ஆனவழி தேடினலும் அடைக்கலஞ் சேராயோ?
அடைக்கலஞ் சக்க தேவி அம்மனும் மறந்தாளோ?
அம்மனும் மறந்ததனலண்டரிடஞ் சென்ருயோ?
அண்டரிடஞ் செல்லு முன்னே அடைந்தாயோ வெற்றிக் கொடி
அண்டரிடஞ் சென்றபின்னே அக்கொடியுந் தோற்ருயோ?
அய்யாவே என்சாமி அப்பனிடஞ் சென்ருயோ?
அப்பனுனைக் கண்டெதேனுஞ் செப்ப நேரில் வந்தாளோ?

ஆலை வாய்க் கரும்புபோலே
வேலை வாய்த் துரும்பு போலே
ஆற்றில் நட்டுங் கோரை போலே
காற்றிலிட்ட பட்டம் போலே
ஆண்டிப் பரதேசி போலே
தூண்டில் பட்ட மீனைப் போலே
ஆவிழந்த கன்று போலே
சோடிழந்த அன்றில் போலே
ஆனேனே சாமிகளே[57]
அறியாரோ பூமியிலே
ஆளொரு நாள் பார்க்க வேணும்
அழகொரு நாள் பார்க்க வேணும்
வேலையொரு நாள் பார்க்க வேணும்
விருந்தொரு நாள் சமைக்க வேண்டும்
வேண்டிய சுகானு போகம்
நீண்டிருவார் வாழையிலே.
ஆண்டவனை ழைத்தனரோ
ஆகாகா ஐயோ ஐயோ.

தன்னனச் சந்தம்

ஐயோ உடையாளி[58] தீவினையோ ஆயனமைத்[59] திட்ட கட்டளையோ?
ஆயனமைத்திட்ட கட்டளையோ யாராலேற்பட்ட கற்பனையோ?

57. தன் துயரத்தைப் பல உவமைகள் மூலம் கூறுகிருள். இவை நாட்டு உவமைகள் (folk simile)
58. உடையாளி—கடவுள்
59. ஆயன்—கண்ணன்

யாரைச் சதமென்பேன் பூமியிலே ஐயாவே உன்
துணையல்லாமல் ?
எவரைச் சதமென்பேன் பூமியிலே ஏந்தலே உன்
துணையல்லாமல் ?
ஆவி பதறுதே பார்க்கையிலே அங்கம் நடுங்குதே
பேசையிலே[60]
ஆவி பழுக்குதே சிந்தையிலே ஆக்கமழிந்ததே பாஞ்சையிலே
வாழை பழுக்குதே சோலையிலே மாங்குயில் வாடுதே
பாஞ்சையிலே.
கூடிக் கலந்திடும் நாளையிலே கோலமழிந்ததே மேனியிலே
வாரி யணைத்திடும் கையாலே மார்பிலடித்திடக் காரணமோ ?
புஷ்ப மணைத்திடுங் கையாலே பூமியில் தட்டவும்
காரணமோ ?
நீங்கள் பிறந்தது வல்லநாடு நீதிபிறந்தது பாஞ்சையிலே
ஆவிதுறந்தது சண்டையிலே ஆண்டவன் என்னெதிர்
வாரதப்போ ?
நாங்கள் மயங்கிய வேளையிலே நாயகனென்றெதிர்
வாரதெப்போ ?
வீரம்பிறந்த வல்லநாடு வெற்றியடைந்தது பாஞ்சையிலே.
சாமிபிறந்தது வல்லநாடு தங்கம்[61] பிறந்தது வல்லநாடு
தங்கம் மயங்கிய வேளையிலே சாமி நீ என்னெதிர்
வாரதெப்போ ?
உன்கட்டை சந்தணக்கட்டையிலே ஓங்கிய தீயினில்
வேகையிலே
என்கட்டை தங்கமா உன்னுடன் இன்றே உடன்கட்டை
ஏறுமல்.

கட்டபொம்முதுரை வெள்ளையனிறந்த உடன் ரொம்பக் கவலை
யடைந்து பதிலாள் தேடப்புறப்படல்—மேற்படி சந்தம்
கட்டபொம்முதுரை சொல்வது

தம்பிதம்பி ஊமைத்துரை சங்கடம் நேர்ந்ததைப்
பார்த்தனையா ?
மட்டில்லா வெள்ளையன் போனபோதே வல்லபம்பேசவு
மார்க்கமுண்டோ ?
கோடிதவங்கள் செய்தாலுங் கொற்றவன் போலக்
கிடை

60. பேசுகையிலே
61. தங்கம்—வெள்ளையம்மாள் தங்கமென்று தன்னைக் குறிப்பிடுகிறள். அவள் பிறந்த ஊரும் வல்லநாடு.

மேதினி சுற்றித்திரிந்தாலும் வெள்ளையன்பேர்லும் கப்படுமோ?
எப்படியாகிலும் பார்க்கவேண்டுமின்றே புறப்பட
வேண்டுமையா
சேனை மடிந்ததைப் பார்க்கையிலே செப்பற்கடங்குமோ
சிந்தையிலே?

இரண்டு பேரும் புறப்பட்டுச்செல்ல இச் சமாச்சாரம் சென்னைக்கு பறந்தது. மகாராணியவர்களுக்குத் தெரிவிக்க அப்படிப்பட்ட சுத்த வீரனைக் கொல்லாமல் சின்ன நாவபுப்பட்டங் கொடுக்கச் சொல்லி அக்கடிதம் கோவில்பட்டிக்கி வர, மற்றப் பாளையப்பட்டாரறிந்துவேறே கடிதம் எழுதித்[62]தெரிவிக்க அக்கினிச் [63]சென்னல் பட்டாளத் துடன் புறப்படல்—இரண்டாவது சண்டை—அக்கினிச் சென்னல் கோபம்

அத்தரி மா நிரி மாதரிச்சேசா செய்தானே கட்டபொம்மு
நெய்யிலே ரொட்டியைத்தின்னலாமா மெய்யிலே சட்டைகள்
போடலாமா?
தொப்பிதலையிலே வைக்கலாமா துரைகளென்று பேர்
சொல்லாமா?
காலிலே சூசுகள்[64]போடலாமா கையிலே துப்பாக்கி
வைக்கலாமா?
இங்கில்சுக் கொடியை நிறுத்தலாமா இங்கிலாண்டிலே
வசிக்கலாமா
பற்பல யோசனை செய்யவேண்டாம் பாஞ்சைப் பதிக்குப்
புறப்படவே

புறப்பட்டு பட்டாளங்களுடன் இங்குள்ள பாளையப்பட்டாரால் வெள்ளையனுப் பதிலாள் தேடிப் போனதையறிந்து பின் சென்று விரட்டல்—மேற்படி சந்தம்

ஆரடா ஆரடா சிப்பாய்காள் அஞ்சாத யுத்தங்கள் செய்ய
வேண்டும்.

---

62. இச்செய்தி பிற்காலத்தில் புனையப்பட்டது. இதற்கு ஆதாரமில்லை. கட்டபொம்மு கோட்டையை விட்டுப் போனவுடன் பிற பாளையத்தாருக்கு அவனோடு சேரக்கூடாதென்றும், அவனுக்குத் தங்க இடமளிக்கலாகாது என்றும் கலெக்டர் லூஷிங்டன் அனுப்பிய சுற்றறிக்கை.

63. Major Agnew.

64. சூசுகள்—Shoes

65. சட்டபொம்மு, சென்னைக்குச் சென்று திருநெல்வேலிக் கலெக்டரைப் பற்றிப் புகார் செய்யச் செல்லவேண்டுமென்றுதான் எண்ணினான். அதற்காகவே

கப்பங்கட்டாத கட்டபொம்மைக் கண்டுபிடித்திட
வேண்டுமடா
எட்டு நாளையிற் பார்க்கவேண்டும் ஏலேலே தூரத்திலே
போடவேண்டும்.
எவ்விடஞ் சென்றனோ பாஞ்சையிலே எங்கே இருக்கிறான்
பாருங்கடா.
மாயா விநோதத்தில் மிக்கவன்தான் வஞ்சகஞ் செய்திடத்
தக்கவன்தான்,
ஊமைத்துரைக்கு மூத்தவண்டா ஊக்கம் பிறந்திட்ட
கட்டபொம்மு.

அக்கினிச் சென்னல் பட்டாளங்களுடன் பின்தொடர கட்ட பொம்மு துரை நடுக்காடு நத்தங்காடு சென்று காளைக்குடி முத்தையப் பாண்டியனால் உபசரிப்பது—மேற்படி சந்தம்

அட்டதிசைகளும் வெற்றியிலேலஞ் சாதலேந்திடுஞ் சிங்கங்களே
அஞ்சாதலேந் திடுஞ் சிங்கங்களே ஆகாத காலமோ உங்களுக்கு
ஆகாத கால மாலுங்களுக்கு ஆண்டவனுந் துணை
செய்யலையோ

கட்ட பொம்மு துரை சொல்வது

காளைக்குடி முத்தைய பாண்டியா காரணவெள்ளையைத்
தோற்றதனால்
அங்கம் நடுங்குதே என்—செய்வேன் ஆவியொடுங்குதே
மன்னவனே
வெற்றிக் கொடிதந்த வீரனைப்போல் சுற்றித்திரிந்தாலுங்
கிட்டிடுமோ

இப்படிப் பேசிக் கொண்டிருக்கையில் பட்டாளம் வருஞ்செயலை யறிந்து நாகலாபுரம் எற்றப்ப நாய்க்கரால் வஞ்சனைக்காளாகி சிவசங்கை சின்ன மருது பெரிய மருது கண்டு உபசரித்தல்.

பெரிய மருது சொல்வது

வாருங்கே வாருங்கோ மன்னவரே வஞ்சனைக்களாகி
வாடலாமா

வடக்குநோக்கிச் சென்றான். வழியிலிருந்த வெள்ளைப் பட்டாளங்களைத் தாக்க வில்லை. போகிறவழியில் ஜமிந்தார்களுக்கு லூஷிங்டன் அனுப்பிய சுற்றறிக்கையைப் பார்த்துத் தப்பிக்கொள்ள எண்ணுகிறான். புதுக்கோட்டை ஜமின்தார் வெள்ளையர் விரோதி என்று கட்டபொம்மு நினைத்தான். பின்தான் அவன் காட்டிக் கொடுப்பவன் என்பது கட்டபொம்முவிற்குத் தெரிந்தது.

வஞ்சனைக் களாகிவாடலாமா வையகத்தார் நகைசெய்திடவே
யார் செய்தபாவமோ பூமியிலே நீர்இந்தமாதிரியாவதற்கு

கட்டபொம்மு துரை சொல்வது

ஆதிபராபரன் சோதனையோ நானென்ன பாவங்கள்
செய்தவனோ?
நானென்ன கர்மங்கள் செய்தவனோ ஞாயமில்லாமலே
வாடுகிறோம்.
ஞாய மில்லாமலே வாடுகிறோம் நாட்டில் நகைத்திட
ஓடுகிறோம்.

இந்த விதம் பேசிக்கொண்டிருக்கையில் பட்டாளம் அங்கும் வருவதைக்கண்டு சித்தாத்துக்காலின் வழியாய்ச் செல்ல சாய்புமார் கண்டு எதிர்த்தல்—சாய்பு ார் சண்டை—மேற்படி சந்தம்

சாதித்துலுக்கரே வாருமையா சங்கதிஒன்றினைக் கேளுமையா.
சென்னை துரைத்தனத்தார்க் கடுமை செய்கின்ற பாரத
நாட்டினிலே[66]
கப்பங்கட்டாத கட்டபொம்மு கஷ்டமடைந்திங்கே வந்ததனால்
எல்லோரும் சண்டைகள் போட்டோ மானாலிரண்டு பேரு
மகப்படுவார்
கைப்பிடியாகப் பிடித்து நாமள் கவர்மெண்டார்
கையிலொப்புவித்தால்
நஞ்சை இனமுண்டு புஞ்சையினமதை நம்பிப் பிழைக்கலாம்
கோடிசனம்
ஆகையினாலோடி வாங்களடா அதோ போகிறான்
கட்டபொம்மு.

சாய்புமார் பேசிவருவதைக் கண்ட ஊமைத்துரைக்கு மகாபராக்ரம ஆவேசமுண்டாகி சொல்வது—என் ஆண்டவளே சக்கதேவி யென்று பாடிப் பின்னால் அவர்கள் நேரிலுரைப்பது. மேற்படி சந்தம்—ஊமைத்துரை சொல்வது—பராக்கிரமம்

மொட்டைத்தலையிலே கோணக்குல்லா முகத்மல்லாவைத்
தெய்வமென்றீர்

---

66. பாரதநா டு—என்ற எண்ணம் தேசிய இயக்கம் நாடு முழுவதும் தோன்றிய பின்னர் தோன்றிய கருத்து. இப்பாடல் தோன்றிய காலம் 1920. இக்கதையே ஏகாதிபத்திய எதிர்ப் புணர்ச்சியைத் தூண்டவும் வளர்க்கவும் பயன்பட்டது.

கட்டபொம் மென்றறியாததனுல் கபடஞ்செய்ய
நினைத்தீர்களே.
வேண்டாமய்யா சண்டை வேண்டாமய்யா வேண்டுகிரும்
சண்டை வேண்டாமையா.
சண்டைகள் போடவு மார்க்கமுண்டோ சாடைகள் பேசவும்
ஞாயமுண்டோ ?
சாடைகள் பேசவும் ஞாயமுண்டோ சக்கம்மாதிக்கம்மா
ஓடிவாயேன்.

இரண்டுபேர்களும் பேசி வெற்றியடைந்து விருப்பாச்சி சென்று ராஜா ஏற்றில் இருட்டுக் கொட்டகையிலடைபட்டு மல்லப்புறத்து வழியாய் வரும்போது தாகத்தால் உழுகிறவர்களிடம் தண்ணீர் கேட்டல்—மேற்படி சந்தம்—ஊமைத்துரை சொல்வது.

மேழிபிடிக்கின்ற அண்ணமாரே வேண்டுகிரும்
கொஞ்சந் தாக சலம்
தாகந்விர்க் கசலம் கொடுத்தால் தாழ்விலா தென்றுமும்
வாழ்ந்திருப்பீர்

முத்தணத்தேவன் வெறுத்துப்பேசல்

ஏருழு மெங்கட்கே தண்ணீரில்லை என்றுலுனக்குக்
கொடுப்பதெங்கே ?

ஊமைத்துரை சொல்வது

ஏனப்பா இப்படிப் பேசுகிருய் ஏழைக்கிரங்காதோ உன் மனது?

முத்தணத் தேவன் சொல்வது

தர்ம மடமிங்கே கட்டவில்லை சாஸ்தியாய்ப் பேசிஞல்
கோபம் வரும்

கூலிக்குழுங் குப்பணத் தேவன் சொல்வது

தாகத்திற்குச் சலம் இல்லையென்ருல் சங்கடம்
நீங்காதலைந்திடுவார்.
ஆரய்யா தாகந்தணிந்திடுவீர் அன்பிலா தெங்கள்மேற்
கோபம் வேண்டாம்.

அவ்விதம் சொன்னவனை ரச்சித்து [67] சொல்லால் பச்சித்து [68] வடக்கே புறப்பட்டுப்போக மழையதிகரிக்க இருவரும் பிரிந்தனர்.

தம்பியை நினைத்துப் டலம்பல் – கட்டபொம் முதுரை புலம்பல்

விருத்தம்

பாஞ்சையில் கோட்டை யிட்டோம் பக்தியால் சக்கதேவி,
வாஞ்சையிலரசு செய்து வாழ்ந்தநாள் முதலின்றாக,
நாம்சனம் பிரிந்ததில்லை நம்பின என்னை நீங்கி
போஞ்செயல் தெரிகிலேனே பூபதி என்செய்கேனே

தன்னனச் சந்தம்

என்பிறப்பே ஐய்யா ஊமைத்துரை எங்கே சென்றாயோ
ஊமைத்துரை
வானமுழங்கையிலே திகைத்து மற்றவழி கூடிப்போயினையோ?
மேகமுழங்கையிலே திகைத்துவேறு வழிகூடிப் போயினையோ?
மின்னலை பளீரெனமாரி பொழிந்திடும் வேளையிலே
புத்திமாறினதோ?
எங்கே தேடுவேன் பூமியிலே எவரைக் கேட்பது பாண்டியனே?
கால்கள் தள்ளாடு தூமைத்துரை, கண்களிருட்டுதே
பாண்டியனே.

கட்டபொம்முதுரை புலம்பிக் கொண்டு தொண்டைமான் புதுக்கோட்டை சேர்ந்தவுடன் அங்கேபிடி படல் – தொண்டைமான் புதுக் கோட்டை ராஜாசபை

மந்திரிகளே ஓடி வாருங்களே வந்துஎன் வார்த்தையைக்
கேளுங்களே.
தந்திரிகளே ஓடி வாருங்களே சங்கதிநான் சொல்லக்
கேளுங்களே.

மந்திரிகள் சொல்வது

என்ன உரைத்தாலும் கேட்பதல்லா லெதிர்த்துப் பேசிட
வார்த்தை யுண்டோ ?
எதிர்த்துப்பேசிட வார்த்தை யுண்டோ எவ்வித உத்தரவுங்
கொடுப்பீர்.

ராஜா சொல்வது

பாஞ்சைப்பதிமன்னன் கட்டபொம்மு பட்டுக்கொண்டான
மதிஷ்டப்படி.

67. ஆதரித்து
68. பட்சம் பாராட்டி

கும்பினி யார்கையில் ஒப்புவித்தால் கோடி இனும் உண்டு
குற்றமில்லை.
இங்கிலீசுக்காரருக்கு ஒப்புவித்தால் என்றும் சுகமாக
வாழ்ந்திடலாம்
உங்களபிப் பிராய மெப்படியோ உண்மை விளம்பிட
வேண்டுமையா?

மந்திரிகள் சொல்வது

நீங்களுரைத்தபின் மாறுமொழி நாங்களுரைத்திட
ஞாயமுண்டோ ?

கும்பினி யார்க்குக் கடிதம்

ஆங்கிலேய வீரரே வாருமையா அவசரம் பதில்கூறுமையா.
கட்டபொம் முதுரை பட்டுக்கொண்டார் கையில் விலங்கினைப்
போடுமையா.
தொண்டைமான் புதுக்கோட்டை வந்தால் துன்பமில்லாமல்
பிடித்திடலாம்.

இக்கடிதம் கண்டவுடன் அக்கினிச் சென்னல் துரையவர்கள் பட்டாளங்களுடன் வந்து கட்டபொம்மு துரையைப் பிடிக்கும் போது என்னையாண்டவளே என்று பாடி வீரம் பிறக்குஞ்சமயம் வாள்தவறின உடனே விலங்கிட்டு 69 கல் வண்டியிலேற்றி கயத்தாற்றிலே கட்டப் புளியிலே தூக்கும்போதுபுலம்பல்

விருத்தம்

அநியாய மநியாய மென்போலே கவலைகளாரடைந்தார்
புவிமேலே
ஆதியிலே முன்னோர்கள் கொத்துப் பல்லாரியை யகன்றதை
நினைந்தழுவேனோ ?
அழகான பாஞ்சையிலே கோட்டை யிட்டலதிலாதரசினை
நினைந்தழுவேனோ
அஞ்சாதபிள்ளை மகனதிகார வார்த்தை யிலநீதியை
நினைந்தழுவேனோ?

69. வெள்ளை அதிகாரிகள் குறிப்புக்களிலிருந்து கட்டபொம்மு தூங்கிய நேரம், வெள்ளை வீரர்கள் சூழ்ந்து கொண்டார் களென்றும், கத்தியை எடுக்க நேரமில்லை என்றும் தெரிகிறது. கட்டபொம்மு கத்தியை எடுக்கு முன்னரே கைது செய்யப்பட்டான்.

ஆகாத வேலையுதவான் அத்தம்பியின் கந்தையை
நினைந்தழுவேனோ ?
அன்பான துரைமார்கள் மீட்டிங்கு செய்யாதலைந்ததை
நினைந்தழுவேனோ ?
அப்புறமி ராமநாத புரங் கோட்டையிலடைத்ததை
நினைந்தழுவேனோ ?
அதிவீர வெள்ளையன் யுத்தத்தில் வானுலகடைந்ததை
நினைந்தழுவேனோ ?
நனியான புகழ்பெற்ற அவனமக்காரென நடந்ததை
நினைந்தழுவேனோ
நாகலா புரமதனிலே வஞ்சகஞ் செயலடித்ததை
நினைந்தழுவேனோ ?
நானடுக்காடு நத்தக்காடுகளை குடி நண்பரை
நினைந்தழுவேனோ ?
நம்பிய குளத்தூரிலே சுப்பையா நடந்ததை நினைந்தழுவேனோ?
நத்துசிவகங்கை யிலிரண்டுபேர் துணைசெய் நலந்தினை
நினைந்தழுவேனோ ?
நலமான சாய்புமார் யுத்தத்திலே சொல்லி நகைத்ததை
நினைந்தழுவேனோ ?
ராஜாயற்றினிலிருள் பிறங்கு கொட்டையால் நலிந்ததை
நினைந்தழுவேனோ ?
நானிலந்தனிலெதை நினைந்தழுவதம்பிகா, நம்பினேனருள்
செய்வாயே [70]

கட்டபொம்முதுரை காலஞ் சென்ற பின்னர் ஊமைத்துரை கன்னிவாடியில் பிடிபட்டு பாளையங் கோட்டையில் அடைப்பட்டு முள்ளுப்பட்டி முத்தப்ப நாயக்கரால் சிறை மீண்டு தூத்துக்குடியில் கல்யாணஞ் செய்து மறுபடியும் மண்ணுலே கோட்டையிட்டு ஏழுவருடம் ஆண்டபின்னும் விரோதமான காரியம் நிற்கவில்லை. மென்மேலுங் கோளான காகிதங்கள் சென்னைக்குப் போனதால் இரக்கமுள்ள துரைத்தனத்தார்க்குப் பின்னும் கோபம் பிறந்து அக்கினி மேஜர் கண்ணுடிச் சென்னல் பட்டாளத்துடன் ஆரக்குளம் பக்கத்தில் கூடாரமடித்தல்[71]

வண்ணாத்தி வஸ்திரம் சலவை செய்யப் புறப்படல்-தென்பாங்கு சந்தம்

70, இதுபோன்ற பாடல்கள் அருணாசலக் கவிராயரது இராமநாடகத்தில் காணப்படுவது. வேறு நாட்டுப்பாடல்களில் ஊமைத்துரை தன்னோடில்லை என்ற ஓர் குறை தவிர கட்டபொம்மு மனத்தில் எக் கவலையும் இல்லையென்றே, கூறுகின்றன. இச்செய்தி வரலாற்றுண்மையல்ல.

71. ஊமைத்துரை, கட்டபொம்மு தூக்கிலிடப்பட்ட காலத்தில் பாளையங்கோட்டைச் சிறையிலிருந்தான். பின்னர் சிறையிலிருந்து

ஆனைமேலே அழுக்கெடுக்கும் ஏமச்சான்
ஆண்டிவண்ணான் பேத்தி நானே தில்லேலே
லோலே லோலே லோ

தன்னானன்னனானானே
குதிரைமேலே அழுக் கெடுக்கும் ஏமச்சான்
குமரவண்ணான் பேத்திநானே தில்லேலே லோலே
லோலே லோ

கழுதைமேலே அழுக்கெடுக்கும் ஏமாமா
கருப்பவண்ணான் பேத்தி நானே தில்லேலே
லோலே லோ [72]

வண்ணாத்தி தன் புருஷனைப் பார்த்துச் சொல்வது

கழுகுமலை குருவிகுளம் ஏசண்டாளா
கண்டெடுத்த சுண்டுமுத்து ஏசண்டாளா
சுண்டுமுத்தைக் காணாமல் ஏசண்டாளா
சுண்டுதாளே கண்ணீரை ஏசண்டாளா
நானும் நடந்திருப்பேன் ஏசண்டாளா
நடப்பாரைப் பார்த்திருப்பேன் ஏசண்டாளா
சாமி நடையைப் போலே ஏசண்டாளா
சையலிலே நான்காணேன் ஏசண்டாளா [73]

ஊரில் அழுக்கெடுப்பது — தன்னனச் சந்தம்

கழுதை பத்தவும் நேரமாச்சு கஞ்சிஊத்துங்கோ
அம்மா மாரே
அழுக் கெடுக்கவும் நேர மாச்சு அன்னம் போடுங்கோ
அம்மா மாரோ
துறைக்குப் போகவும் நேரமாச்சு சோறு போடுங்கோ
அம்மா மாரே
சோறு போடுங்கோ அம்மா மாரே நேரமாகுது போகவேணும்

வண்ணான் சேலை துவைப்பது

கட்டபொம்மு சீமையிலே சோ சோ சோ
காரணங்கள் மெத்த உண்டாம் சை சை சை

கம்பளத்தாரால் மீட்கப்பட்டதும், பாஞ்சாலக்குறிச்சிக்குச் சென்று கோட்டையிட்டதும், இரண்டாவது போரில் கோட்டைப் பிடிபட்டதும், பின்னர் சிவகங்கை சென்று அங்கு போரில் ஈடுபட்டு பிடிபட்டுத் தூக்கிலிடப் பட்டதையும், பிற நாட்டுக் கதைப்பாடல்களும், வெள்ளையர் குறிப்புக்களும் கூறுகின்றன. எனவே ஊமைத்துரை 7 வருஷம் ஆண்டது உண்மையன்று.

72. 73. கோவில்பட்டி வட்டார நாட்டுப் பாடல்கள்.

ஊமைத்துரை சீமையிலே சோ சோ சோ
ஊக்கங்களு மெத்த உண்டாம் சை சை சை
பாஞ்சாலி சீமையிலே சோ சோ சோ
பாக்கியங்கள் மெத்த உண்டாம் சை சை சை
சதுரகிரி மலை யோரம் சோ சோ சோ
சார்ந்திருக்கும் திருகுகள்ளி சை சை சை
திருகுகள்ளி பூவெடுக்க சோ சோ சோ
திரிந்தேன் சிலகாலம் சை சை சை
என் புருஷன் அழுக்கெடுக்க சோ சோ சோ
இரு பேரும் பொதி சுமக்க சை சை சை
பின்புருஷன் முன்னே போக சோ சோ சோ
பேசமாட்டா சக்களத்தி சை சை சை
ஆற்றுக்குள்ளே ஊத்துத்தோண்டி சோ சோ சோ
அழுக்குச் சேலை யெல்லாந் தப்பி சை சை சை
வேற்றுப் பொழுதாகு முன்னே சோ சோ சோ
வீட்டுக்கு நாம் போக வேணும் சை சை சை[74]

சேலை துவைத்துக் கொண்டிருக்கும் போது ஆரக்குளம் பக்கம் பட்டாளங்களைக் கண்டு தன் புருஷனுக்குரைப்பது—தன்னன சந்தம்

ஏடே ஏடே என்புருஷா என்னமோ சூதாய்த் தோணுதடா.
பட்டாக் கத்தி பளீரெனவே பட்டாளங்களைப் பார்த்தனையா
இன்னஞ் சண்டைகள் செய்யத்தாண்டா இங்கே கூடுது
பட்டாளம்.

கால மழைகள் பெய்ததிலே கம்பங்கதிர் விளைந்திடவே
படகுருவி போற் கூடுதடா பார்த்திடவே பயமாகுதடா.
பார்த்திடவே பயமாகுதடா பாஞ்சையில் மன்னற்குச்
சொல்லவேணும்.

வண்ணான் சொல்வது—மேற்படி சந்தம்

ஆமடி ஆமடி சின்னப்பிள்ளை அறிந்து சொன்னவள்
கொட்டிக்காரி,
இச்சணமே சென்று சொல்லாவிடில் என்ன விளையுமோ
பாஞ்சையிலே.
கண்களிற் கண்டதைச் சொன்னோமானாற் கருணை செய்குவாள்
சக்கதேவி
நேரிற் கண்டதைச் சொன்னோ மானால் நியாயமுன் டென
ஓடிவாடி.

74. வண்ணான் நாட்டுப்பாடலைத் தழுவி எழுதியபாடல். இப்பாட்டில் 8—11 அடிகள், 11 முதல் 16 வரை நாட்டுப்பாடல் அல்ல; புலவர் எழுதியது.

ஊமைத்துரையிடம் வண்ணாத்தி சொல்வது

பாஞ்சை பதியாளு மன்னவனே பார்த்தசங்கதி கேளுமையா
ஆரக்குளம் பக்கத்திலே ஐநூறுபட்டாளம் கூடினதால்
எங்கள் கண்களிற் கண்டதை இப்பொழுதே அதைச்
சொல்லுற்றோம்
என்ன துன்பம் விளைந்திடுமோ என்ன செய்குவோம் ராஜாவே

பட்டாளம் வந்திருக்கிறதை வண்ணாத்தி சொல்லக் கேட்ட வுடனே
சட்டிப்பகடை பெட்டிப்பகடை சண்டைக்குப் புறப்படல்
கோவிந்தனுராதனை பந்தமெடுத்தாடல்

ஓராம் படித்தளமாம் கோவிந்தா ஒய்யாரச் சாவடியாம்
ஈராம் படித்தளமாம் கோவிந்தா இந்திரவர்ண மேடைகளாம்
மூன்றும் படித்தளமாம் கோவிந்தா மும்மூர்த்தி காவல்களாம்
நாலாம் படித்தளமாம் கோவிந்தா நாராயண மந்திரங்களா
ஐந்தாம் படித்தளமாம் கோவிந்தா அன்பர்கட்கு
மோட்சங்களாம்

ஆறும் படித்தளமாம் கோவிந்தா அன்பர்கட்கு காட்சிகளாம்
ஏழாம் படித்தளமாம் கோவிந்தா ஏகாந்த லீலைகளாம்
எட்டாம் படித்தளமாம் கோவிந்தா எண்திசையோர்
கூட்டங்களாம்
ஒன்பதாம் படித்தளமாம் கோவிந்தா ஓங்கார சப்தங்களாம்
பத்தாம் படித்தளமாம் கோவிந்தா பாண்டுரங்க
நித்திரையாம்
பத்துப்படிகளென்ன கருமலையா உனக்குப் பதினெட்டா
மேல் படியாங்கருமலையா
எட்டுப்படிகள் என்ன கருமலையா உனக்கு ஏகாந்த சாட்டை
யென்ன கருமலையா
வாருமையா சோலைமலை வந்து விளையாடும் வீதியிலே
காக்கா யைக்கண் வாங்கிவிட்ட' பெருமாளே கஞ்சனை
நெஞ்சை வகுத்த பெருமானே
கல்லேத்திக் கடலையழைத்த பெருமாளே வில்லேத்தி
ராவணனைக் கொன்ற பெருமாளே[75]

கோவிந்தனுராதனையால் பெட்டிப்பகடை சொல்வது
தன்னனச் சந்தம்

ஒரே ஒரே சட்டி போடா ஒஸ்த்தானே ஒஸ்த்தானே
ஒஸ்த்தானேரு

75. நாட்டுப்பாடல். தீச்சட்டி எடுப்போர் பாடுவது.

முந்தரசச் சினவாரிகினி மொக்குமேமு கனமோரு
என்னி கால முண்டிஞலும் எனக சச்சிதா போத்தாரு
செய்யின கட்டத்த எத்தண்டரு செப்பமாட்டலு
வினவண்டரு
ஜகடம் பெட்டி சச்சவால சக்கம்ம பாதமு சேரவாலா
இதிமஞ்சி யோ சனேரு எல்ல கூடி போத்தமுரு
இங்கிலீசுவாரு சூசித்த எல்ல சே சே ரேரு நேன்கண்டிரு

பொட்டிப் பகடை சொல்வது

இங்கிலீசுவாரு சூசித்த யேமிசேசு பொட்டி போடா
டுப்பென்ற துப்பாக்கி நீட்டுத்துறு குப்பென்று
கிந்தபடியவாலா
குப்பென்று கிந்தே படபோத்தே கோபமுகா கூடம்
பெட்டவாலா
அம்மா பிட்டின கால முரு அந்தே சச்சின வாறுதாரு
இங்கா யோக்ரு பெட்டொத்துரு இவடனே
பயிலெக்கண்டரு[76]

கண்ஞுடிச் சென்னல் சொல்வது

டப்பென்று சத்தங்கள் கேட்கு முன்னே சாற்றுமலோடுங்கள்
சக்கிலிகளா

பகடைகள் சொல்வது

டப்பென்று சத்தங்கள் கேட்டாலும் சாகத்துணிந்தவ
ரோடுவாரோ

76. தெலுங்குப் பாடலுக் குத் தமிழ் மொழிபெயர்ப்பு.
ஏலே ஏலே சட்டிப்பயலே வருகிறேன் வருகிறேன் வருகிறேன்டா
முன்னல் இறந்த பேர்களைவிட நாமென்ன அதிக கனமோடா
எத்தனை காலம் இருந்தாலும் இறுதியில் செத்துத்தான் போவார்கள்
கையில் கம்புகள் எடுங்களடா சொல்லும் வார்த்தைகள் கேளுங்கடா
சண்டை செய்து சாகவேண்டும் சக்கம்மா பாதம் சேரவேண்டும்
இதுதான் நல்ல யோசனைடா எப்படிக்கூடிப் போகலாம்டா
இங்கிலீஷ்காரர்கள் பார்த்தால் எப்படிச் செய்வாரோ போங்கடா

(பொட்டிப் பகடை சொல்வது)

இங்கிலீஷ்காரர்கள் பார்த்தால் என்ன செய்வான் பொட்டிப் பயலே
டுப்பென்று துப்பாக்கியை நீட்டுவார்கள் குப்பென்று கீழே படுக்கவேண்டும்
குப்பென்று கீழே படுக்காவிட்டால் கோபமாய்ச் சண்டை செய்யவேண்டும்
அம்மா வயிற்றில் பிறந்த அன்றே இறந்தவர்களாக நினைக்கவேண்டும்
இனியும் யோசனை வேண்டாம்டா இப்போதே புறப்படுங்கடா

கண்ணுடிச் சென்னல் சொல்வது

*சாகத்துணிந்தவர் போகமாட்டார் சண்டைக்கு வந்தவர்
மீள மாட்டார்*

பகடைகள் சொல்வது

*சண்டைக்கு வந்தவர் மீளா விடில் சக்கம்மை பாதத்தைச்
சேர்ந்திடுவோம்*

துரை சொல்வது—மேற்படி சந்தம்

குண்டுவருகுது குண்டுவருகுது கண்டுவிலகிடத் தக்கவரோ

பகடை சொல்வது — மேற்படி சந்தம்

*குண்டையுந் தட்டியே கம்புவருகுது கோபத்திற் கார் பதில்
சொல்லுவரோ?*

இவ்விதம் பேசி கோவிந்தனு ராதனேயில் வேண்டிய
பாடுபட்டும் குண்டுக்கு நேர் நிற்கமுடியாமல் முடிந்தனர்
பகடைகள் முடிந்த வுடன் துரைகள் சொல்வது
மேற்படி சந்தம்

*சட்டியுடைந்தது [77] குண்டாலே தன்மை பிறந்தது
பாஞ்சையிலே.
பொட்டி கழிந்தது[78] குண்டாலே புண்யம் பிறந்தது
பாஞ்சையிலே.
பொட்டியும் சட்டியும் போனதிஞல் போருந்துலேந்தது
இன்ருேடே.
போருந் துலேந்தது இன்ருேடே பொல்லாத ஊமையைப்
பாருங்கடா.*

**இந்த விதமான சண்டைசெய்தால் பாஞ்சைக் கதிபனுக
விளங்கிய வீரத்தைப் பாரோர் கவனித்தால் நம்மால் பேசுந்தரமா
இருந்தாலும் குண்டுக்கு நேர் நிற்க முடியாதல்லவா? ஆகையால்
பாஞ்சையோர் காலஞ் சென்றனர் ஊமைத்துரைவெளியேறுங்**

77. சட்டிப்பகடை இறந்ததைக் குறிக்கும்.
78 பொட்டிப் பகடை இறந்ததைக் குறிக்கும்.

தந்திரம் யோசிக்கக் கிச்சுக்குடுக்கை[79] போடல்—கோட்டையிற் கடோசிவீரம்—மேற்படி சந்தம். தூத்துக்குடி முத்தையாப் பாண்டியனிடம் அந்தப்புரத்தை எல்லாம் அந்தப் புறமாக்கச் சொல்வது

தூத்துக்குடி முத்தையா பாண்டியா சுந்தரனே சொல்லக்
கேளுமையா
அந்தப் புரத்திலுள்ளவரை அருங்கிணற்றினுள் தள்ள
வேண்டும்[80]

அருங்கிணற்றினிற் றள்ளாவிடில் ஆண்சிறை பெண்சிறைக்
காளாவோம்
ஆண்சிறை பெண்சிறைக் காளாகாது அவசரமாகச்
செய்திடுவோம்

உடனே முத்தையா பாண்டியன் சொல்வது—மேற்படி சந்தம்

அந்தப்புரத்தினிலுள்ளவரே அன்புடனுனென்று
சொல்லுகிறேன்
உங்களெல்லோரையுங் கொல்லும்படி ஊமைத்துரை
தந்தஉத்தரவு
மாறிப்பேசவு மார்க்கமில்லை மாறினாலும் விடப்போறதில்லை
வையகத் தாசையை வையாமல் வானுலகந்தனில்
வாழ்ந்திடுவீர்.

அந்தப் புரத்தை அழிக்கும்போது பட்டத்தரசி வெள்ளையம்மாளை வெட்டத் துணிந்த உடனே அவளுரைப்பது—மேற்படி. சந்தம்

தூத்துக்குடி முத்தையா பாண்டியா துஷ்டத்தனஞ் செய்ய
வந்தனையா?
அண்ணனிறந்திடுஞ் சீமையிலே அடக்கச் சொன்னாரோ
ஊமைத்துரை
கொற்றவனில்லாத சீமையிலே கொல்லத்துணிந்தாரோ
ஊமைத்துரை
வேந்தனில்லாத சீமையிலே வெட்டெனச் சொன்னாரோ
ஊமைத்துரை?

79. grenade என்னும் கையால் வீசும் குண்டு. இது வெடித்தால் மிகுதியாகப் புகை வரும்

80. கிணற்றில் தள்ளியதாகப் பல பாடல்கள் கூறுகின்றன. எரித்துக் கொன்றதாகச் சில பாடல்கள் கூறும்.

என்னையும் வெட்டவும் நீதியுண்டோ ஏந்திழை வெட்டுவேன்
நூறுபேரை
உன்னையும் வெட்டுவேன் வெள்ளையம்மாள் ஊமைத்துரை
தப்ப மார்க்கமுண்டோ?

முத்தையா பாண்டியன் வெள்ளையம்மாள் நிற்கிற வீரத்தைக்
கண்டு ஊமைத்துரையிடம் தெரிவிக்க வெள்ளையம்மாள்
உரைப்பது—மேற்படி சந்தம்

தம்பி தம்பி ஊமைத்துரை சமர்த்தைப் பார்க்கிறேன்
வெள்ளையம்மாள்
சாகத்துணிந்தாயோ ஊமைத்துரை சண்டைக்குத்
தோற்பேனே வெள்ளையம்மாள்
கொல்லத்துணிந்தாயோ ஊமைத்துரை கூசாமல்
வெட்டுவேன் வெள்ளையம்மாள்
தூரப்போ நில்லாதே ஊமைத்துரை துண்டாய்
வெட்டுவேன் வெள்ளையம்மாள்

வெள்ளையம்மாள் வீரங் கொண்டவுடன் ஊமைத்துரை
தாழ்ந்துரைப்பது—மேற்படி சந்தம்

பட்டத்தரசியென் வெள்ளையம்மாள் பாங்கான சோதரி
என்ன செய்வோம்
உனக்குத் துரோகங்கள் செய்யவில்லை உத்தமியே இனி
அஞ்சவேண்டாம்.
இந்த இடந்தனை நீங்கவேண்டும் எந்தஇடத்திற்கும் போக
வேண்டாம்
எந்தவிடத்திற்கும் போகாவிட்டால் என்னென்ன
துன்பங்கள் வந்திடுமோ
என்னென்ன துன்பங்கள் வந்திடுமோ எங்கே சென்றாளோ
சக்கதேவி.

இரண்டு பேரும் சுரங்கத்தின் வழியாய் வெளியேறிப் போகும் போது பட்டாளத்தாள் பின்தொடர வெற்றியுடன் செல்ல கூந்தல் வீழ்ந்து குதிரைக்காலிற் சிக்க உடனே கொலைசெய்து பட்டாளத் திற்ககப்படாமல் கோலார்பட்டிப் பாதை வழியாய்ச் சென்று விட்டிலாபுரம் கருப்பசாமி கோவில் வழியாய் வடக்கே போக கண்ட மனூர்க் கணவாயில் குதிரையைப் புலியென்று சுட நினைத்துப்
புலம்பல்—விருத்தம்

வாயுவுக்கு வேகமுண்டோ பஞ்சவர்ண
மாசில்லாப் பேய்க்குதிரை மாளலாச்சே
தாயனைய வெள்ளையம்மாள் வெற்றிகண்டும்
சந்தேகமில்லாமற் றலையைக் கொய்தேன்
ஞாயமென ராணுவத்தார் பின் தொடர்ந்தார்
நமது சக்கதேவியும் விட்டோடிப் போனாள்
மாயமதா லென்னென்னசெய்த போதும்
வந்தவகை நீங்குதற்கு வகையற்றேனே

தன்னன சந்தம்—என்னையண்டவளே சக்கதேவி என்று பாடவும் கோபம்—அவ்விடம் நீங்கி கெவுனகிரிப் பள்ளி கண்டு ஆதரித்தல். அங்கே பட்டாளந்தேடல்—மேற்படி சந்தம்—பட்டாளத்தார் கேட்டல்

ஊமைத்துரை இங்குவந்ததனை வொளித்துவைத்த நீ உண்மை சொல்வாய்
உண்மையை சொல்லாவிடில் குண்டாலே உன்னையும் சுட்டுப் பரத்திடுவேன்.

பள்ளிகள் சொல்வது

ஊமைத்துரை முகம் நானறியேன் உங்கள் முகத்தையும் நானறியேன்
என் வீட்டுக்காரன்தான் அம்மையினால் ஏங்கிக் கட்டிலில் தூங்குகிறான்
அடிமை சொல்வதில் பொய்யும் மெய்யும் அறிந்து சொல்லிட வேண்டுமையா
வந்து பாருங்கள் வீட்டுக்குள்ளே வம்பு செய்வேனோ பள்ளிமகன்.

வைசூரி என்று ஏமாற்றப் பட்டாளத்தார் போக, எழுந்து ஆலம்பட்டி வங்காள யீஸ்வரிகோவில் சென்று தண்ணீரருந்தி கள்ளிக்கூடத்து சின்னவீராயி பெரியவீராயிடஞ் சென்றவுடன் அவர்கள் வஞ்சனையால் பிடித்துக் கொடுத்தது—பள்ளி சொல்வது

ஏச் சிக்கி ஏச்சிக்கி சின்னப்பிள்ளை இங்கே வா சின்னவீராயி
ஊமைத்துரையைப் பிடிக்க வேண்டும் உடனே சர்க்காருக்குச் சொல்லவேண்டும்
கம்பளத்தாரைப் பிடிக்க வேண்டும் கவர்மெண்டாருக்குச் சொல்லவேண்டும்
கவர்மெண்டாருக்குச் சொன்னோமானால் காப்பாற்று வாருள்ள காலம்வரை

சின்ன வீராயி சொல்வது

ஆமடி ஆமடி பெரியபுள்ளே அறிந்து சொன்ன நீ கெட்டிக்காரி
அதற்குத் தந்திர மொன்றுளது அவற்றைச் செய்யிற்
பிடித்திடலாம்.
முந்திரிச் சாராயங் கோழிக்கறி முட்டை கொடுத்து
மயக்கவேண்டும்
போதைவெறியிலே தூங்கையிலே புலன் தெரியாமல்
கட்டவேண்டும்'

அவ்வஞ்சனையைச் சக்கதேவியால் வெற்றியடைந்து திண்டுக்கல் மலையில் சுப்ரமணியர் கோவில் வந்து எங்கே போனாலும் தப்ப முடியாது பின் வாரீஸ் துலங்க நமது மனைவி தப்பினாள். நாம் தற்கொலை செய்யவேண்டுமென உடனே தற்கொலை யாலிறந்தார்.[81]
தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள்.

சுபம் ! சுபம் !! சுபம் !!!

சக்கதேவிக்குப் பட்டாபிஷேகம்

பார் வாய்ந்த பாஞ்சாலி பதி வாழி
பக்தி தரும் சக்கம்மாள் பதமும் வாழி
சீர் வாய்ந்த நமது மன்னர் செங்கோல் வாழி
தெய்வீகக் கட்டபொம்மு தீரம் வாழி
ஏர் வாய்த்த ஆங்கிலேய அரசும்[82] வாழி
எமது குல வெள்ளை முதலியாரும் வாழி
நேர் வாய்ந்த இன்னூலைப்பாடச் சொன்னோர்
நிச்சய மென்று ரைத்தவரும் நீடூழி வாழி

81. பிறசெய்திகளும், சான்றுகளும் இத் தற்கொலைச் செய்தியை உறுதி படுத்தவில்லை. சிவகங்கைக் கும்மி, அம்மானை இவ்விரண்டும், சிவகங்கைப் போரில் ஊமைத்துரை கலந்துகொண்டு பிடிபட்டுத் தூக்கிலிடப்பட்டதாகக் கூறுகின்றன. வேறு கட்டபொம்மு கதைப்பாடல்கள் ஊமைத்துரை சண்டையில் இறந்தாகக் கூறுகின்றன. தற்கொலைக் கதை மிகவும் பிற்காலத்தில் எழுந்தது. இதனை, வலியுறுத்தச் சான்றுகள் இல்லை.

82 கதையின் ஆரம்பத்திலும், கதையின் முடிவிலும் ஆங்கிலேய அரசை வாழ்த்தியோ, போற்றியோ வாசகங்கள் வரும். புலவர்களும், கலைஞர்களும் போலீசுகாரர்களது கெடுபிடிகளிலிருந்து தப்பிப் பாட்டைப்பாடவும் கூத்தை நடத்தவும், சிற்சிலஇடங்களில் இவ்வாறு ஆங்கிலேயரைப் புகழ்வார்கள், ஆனால் கதை முழுவதும் பிரிட்டிஷ் எதிர்ப்பை வளர்ப்பதாகவே இருக்கும், சிற்சில இடங்களில் கட்டபொம்முவை ஏசுவதும் உண்டு. பிற்காலப் பாடல்களில் இது சற்று அதிகமாக இருக்கும். பிரிட்டிஷ் அரசாங்கத்தை வாழ்த்தாவிட்டால் போலீசாரும்,வெள்ளை அதிகாரிகளும் பாட்டைப்பாடவோ, கூத்தை நடத்தவோ அனுமதிக்க மாட்டார்கள்,